அரச அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டு நாணயமாற்று நிறுவனம்
சாரங்கா நகை மாடம்
MONEY EXCHANGE
ALL COUNTRIES
WESTERN UNION WU
moving money for better
021 221 7007
இல.157/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: 16
விலை:20 ரூபா
காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆவணி 03 செவ்வாய்க்கிழமை 17.07.2018 | கதிர் 253

# தீர்ப்பை முதல்வர் ஏற்றால் பதவி விலக டெனிஸ் தயார்

## அவரே நேற்று சபையில் அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 17

தனது அமைச்சுப் பதவி தொடர்பில் அண்மையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் ஏற்றுக்கொண்டால் தான் பதவி விலகத் தயாராக உள்ளார் என பா. டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணசபையின் விசேட அமர்வு நேற்றுக் கைதடியில் உள்ளபேரவைச்செயலகத்தில்நடைபெற்றது.இதில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். பக்கம் 03

## மஹிந்த சிங்கப்பூர் பயணம்

கொழும்பு, ஜூலை 17

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷதனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று முற்பகல்சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் சென்றார்.

நான்கு நாள்கள் சிங்கப்பூரில் பக்கம் 14

## முல்லைத்தீவில் ஆயுதங்கள் மீட்பு

முல்லைத்தீவு, ஜூலை 17

முல்லைத்தீவுபொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெள்ள முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் கைக்குண்டு உள்ளிட்ட பல ஆயுதங்களை மீட்டுள்ளனர் என முல் பக்கம் 14

## ரெலோ வெளிநடப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17

டெனிஸ்வரனின் அமைச்சுப் பதவி தொடர்பில் விவாதிக்கும் வகையில் நேற்று இடம்பெற்ற வடக்கு மாகாண சபையின் விசேட அமர்வைப் புறக்கணித்து ரெலோ சபையிலிருந்து வெளியேறியது.

இந்தவிவாதத்தைக்கோரியஉறுப்பினர்களில்ரெலோ கட்சியைச் சேர்ந்தவர்களும் உள்ளபோதிலும், இந்த விவாதத்துக்கான நோக்கம் திசை பக்கம் 14

## கௌரவப் பிரச்சினைதான் வேறு எதுவுமே கிடையாது

### கூறுகின்றார் சயந்தன்

யாழ்ப்பாணம், ஜூலை 17

வடக்கு மாகாண சபையில்தற்போதுஏற்பட்டுள்ள அமைச்சரவை தொடர்பான பிரச்சினை வெறுமனே கௌரவப் பிரச்சினையே தவிர வேறெதுவும் பக்கம் 14

## வடக்கு அமைச்சரவைப் பிரச்சினை சபையைக் கலைக்கும் முயற்சியா?

### சந்தேகம் வெளியிடுகிறார் சிவஞானம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

வடக்கு மாகாண சபையில் தற்போது ஏற்பட்டுள்ள அமைச்சரவைப் பிரச்சினை சபையைக் கலைக்க மேற்கொள்ளப்படும் முயற்சியா என்ற சந்தேகம் எழுந்துள்ளது என வடக்கு மாகாண அவைத் பக்கம் 14

## மாகாண சபை விசேட அமர்வை புறக்கணித்தார் முதல்வர் விக்கி

### ஏனைய அமைச்சர்களும் பங்கேற்கவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 17

டெனிஸ்வரனின் அமைச்சுப் பதவி சர்ச்சை தொடர்பில் விவாதிக்கும் வகையில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட வடக்கு மாகாண சபையின் விசேட அமர்வில் முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் உட்பட அமைச்சர்கள் ஐவரும் பங்கேற்கவில்லை.

டெனிஸ்வரனின் அமைச்சுப் பதவிவிடயம்தொடர்பானவழக்கு உயர்நீதிமன்றில் பக்கம் 14

## அலுக்கோசு பதவியை ஏற்க 71 வயது மூதாட்டி தயாராம்



கொழும்பு, ஜூலை 17

அலுக்கோசு பதவிக்கு விண்ணப்பிக்கத் தான் தயாராக இருக்கின்றார் என 71வயதுடைய மூதாட்டியொருவர் தெரிவித்துள்ளார். பக்கம் 14

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் ஊடகங்களோடு அவர் எப்படித்தான் மோதிக் கொண்டாலும் தமிழ் ஊடகவியலாளர்கள் எப்போதும் இலகுவில் தொடர்பு கொள்ளக் கூடியவர் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன்தான்.

அவர் ஒரு ஜனாதிபதி சட்டத்தரணி. நீதிமன்றத்தில் கீரியும் பாம்பும் போல சட்ட மோதலில் பக்கம் 03

## கேப்பாபிலவு மக்களின் காணிகள் விடுவிக்கப்படும் சாத்தியமில்லை

கொழும்பு, ஜூலை 17

முல்லைத்தீவு - கேப்பாபிலவில், இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகள் உடனடியாக விடுவிக்கப்படும் சாத்தியமில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் காணிகளை இராணுவத்துக்கென்றே சுவீகரிப்பதற்கான நடவடிக்கை பக்கம் 14

## மாகாண சபை உறுப்பினருக்கு எதிராக அரச அலுவலர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

### வவுனியா வடக்கு பிரதேச செயலகம் முன்



வவுனியா, ஜூலை 17

வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனுக்கு பக்கம் 14

## இந்திய மீனவர்கள் நால்வர் 37கிலோ கஞ்சாவுடன் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 17

நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறிக் கடற்றொழிலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 4 இந்திய பக்கம் 14

## டெனிஸ் அமைச்சராவதற்கு உள்ள தடைகளை நீக்குங்கள்

### முதல்வரிடம் கோருகிறார் தவராசா

யாழ்ப்பாணம், ஜூலை 17

“மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளையை ஏற்று டெனிஸ்வரன் அமைச்சராகப் பதவி வகிப்பதற்கு உள்ள முட்டுக்கட்டைகளை நீக்கி அரசமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய ஏனைய மூன்று அமைச்சர்களும் யாரென்பதைத் தீர்மானித்து ஆளுநர் ஊடாக உரிய முறையில் பரிசீலனை செய்து பக்கம் 04

## மக்கள் – படையினர் நல்லுறவை குலைப்பதே விக்கியின் தேவை

### சாடுகிறார் இராணுவத் தளபதி



கொழும்பு, ஜூலை 17

வடக்கில் சாதாரண மக்களையும் இராணுவத்தினரையும் பிரித்து இரு தரப்புக்கும் இடையில் உள்ள நெருக்கமான தொடர்புகளை சீர்குலைக்கும் பெரும் தேவை பக்கம் 14

## அனந்தியிடம் கைத்துப்பாக்கி

### அஸ்மின் நேற்று புதுத் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 17

வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன், பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றுக் கைத்துப்பாக்கி ஒன்றை வைத்துள்ளார் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் அயூப் அஸ்மின் தெரிவித்தார்.

வடமாகாணசபை பக்கம் 14

# இலங்கையில் மரண தண்டனைக்கு எதிராக போர்க்கொடி தூக்கும் ஐரோப்பிய நாடுகள்

கொழும்பு, ஜூலை 17

மரண தண்டனையை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வர எடுத்துள்ள முடிவு குறித்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தூதுவர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தமது அதிருப்தியை வெளியிடவுள்ளனர்.

உலகளாவிய ரீதியாக மரண தண்டனைக்கு எதிராக கடைப்பிடிக்கும் பொதுவான நிலைப்பாட்டுக்கு அமைய, கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தூதரகங்கள் இந்த அதிருப்தியை வெளிப்படுத்தவுள்ளன என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எங்கெல்லாம், மரண தண்டனை நடைமுறைப்படுத்தப்பட்டாலும், அதனை நிறுத்துமாறு அரசாங்கத்தை கோருவோம் என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. உலகளாவிய ரீதியாக மரண தண்டனைக்கு எதிரான தீர்மானத்துக்கு ஆதரவாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை வாக்களித்தது.

இலங்கை ஓர் ஐரோப்பியா நாடாக இல்லாதமையால், அது ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பினராக முடியாது.

இது ஒன்றும் புதிதல்ல, மரண தண்டனையை ஒழிக்க வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியமும், அதன் உறுப்பு நாடுகளும், உலகம் முழுவதும் பரப்புரை செய்து வருகின்றன.

இந்த விடயத்தை மிக விரைவில், இலங்கை அரசிடம், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தூதரகங்கள், கொண்டு செல்லும் என்றும் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சிறைச்சாலைக்குள் இருந்து கொண்டே, போதைப்பொருள் வணிகத்தில் சிலர் ஈடுபடுவது கண்டறியப்பட்டமையை அடுத்து, போதைப்பொருள் குற்றங்களுக்காக மரண தண்டனையை வழங்கப்பட்டவர்களுக்கு தண்டனையை நிறைவேற்ற இலங்கை அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதன் ஒரு கட்டமாக, போதைப்பொருள் குற்றங்களுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட 18 பேரின் விவரங்கள், கடந்த வெள்ளிக்கிழமை சிறைச்சாலை திணைக்களத்தினால் நீதியமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இவர்களை தூக்கிலிடுவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்ற போதிலும், இவர்களில் பலர் தமது தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்துள்ளமையால், தண்டனையை நிறைவேற்ற முடியாத நிலை இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வேலை சுதா எனப்படும், விதான பத்திரன சமந்த குமார, மற்றும் ஆசை எனப்படும், தர்மராஜா சுதேஸ் ஆகியோரே சிறைக்குள் இருந்து போதைப் பொருள் வணிகத்தில் ஈடுபடுகின்றனர் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எனினும், இவர்கள் இருவருமே மரண தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்துள்ளனர். இதனால் இவர்களை உடனடியாக தூக்கிலிட முடியாது.

இதனிடையே மரண தண்டனை விதிக்கப்பட்ட 1240 பேர் இலங்கையின் பல்வேறு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 874 பேர் தமது தண்டனைக்கு எதிராக மேல்முறையீடு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## விசேட நீதிமன்றம் சட்டவாட்சி கோட்பாட்டுக்கு எதிரானது என்கிறார் கோட்டாபய ராஜபக்ஷ



கொழும்பு, ஜூலை 17

ஊழல் வழக்குகளைத் துரிதமாக விசாரிப்பதற்கு உருவாக்கப்பட்டுள்ள விசேட நீதிமன்றங்கள் அரசியல் பழிவாங்கலை நோக்கமாகக் கொண்டவை மாத்திரமல்லாது. அது சட்டவாட்சி கோட்பாட்டிற்கும் எதிரானதாகக் காணப்படுகின்றது என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் இதுவரை காலமும் அரசமைப்பின் பிரகாரம் உருவாக்கப்பட்ட நீதிமன்றங்களினூடாகவே நாட்டில் சட்டம் ஒழுங்கு நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால் தேசிய அரசில் சட்டம் ஒழுங்கு பலவீனமடைந்ததன் காரணமாகவே தற்போது சட்டங்களிலும் அரசமைப்பிலும் திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், தற்போது உருவாக்கப்பட்டுள்ள விசேட நீதிமன்றங்களினூடாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் வழக்குகள் ஒரு தனிமனிதனின் அடிப்படை உரிமை மீறல்களை மீறுவதாகவே காணப்படுகின்றது. அதாவது தேர்ந்தெடுக்கப்பட்ட வழக்குகளை மாத்திரம் விசாரிப்பதன் காரணமாக ஏனைய நீதிமன்ற வழக்குகள் கேலிக்கூத்தாக்கப்படுகின்றன.

மேலும், 2015 ஆம் ஆண்டு தொடக்கம் தேசிய அரசு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தினரை அரசியல் பழி வாங்கும் நோக்கில் பல உத்திகளைக் கையாண்டது ஆனால் இதுவரை காலமும் எவ்வித பொய்யான குற்றச்சாட்டுக்களும் நிரூபிக்கப்படவில்லை. அது தோல்வியடைந்த நிலையிலே தற்போது விசேட நீதிமன்றம் உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே உருவாக்கப்பட்டுள்ள விசேட நீதிமன்றம் அரசியல் பழிவாங்கலை நோக்கமாக கொண்டவை மாத்திரமல்லாது, அது சட்டவாட்சி கோட்பாட்டிற்கு எதிரானதாக காணப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்கா புறப்பட்டார் தூதுவர் அதுல் கெசாப்; அமைச்சர்கள், இராஜதந்திரிகள் பிரியாவிடை



கொழும்பு, ஜூலை 17

அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் சிறிலங்காவில் தனது பணிகளை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் இரவு தனது குடும்பத்தினருடன் கொழும்பில் இருந்து அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

மூன்று ஆண்டுகள் பதவிக் காலத்தைப் பூர்த்தி செய்த நிலையில், அதுல் கெசாப் அமெரிக்கா திரும்பியுள்ளார்.

இதனை முன்னிட்டு, அவரை வழியனுப்புவதற்காக நேற்று முன்தினம் அமெரிக்கத் தூதுவரின் இல்லத்தில் இலங்கையின் அமைச்சர்கள், உள்நாட்டு வெளிநாட்டு இராஜதந்திரிகள், அரசியல் பிரமுகர்கள் பலரும் கூடியிருந்தனர்.

நிதியமைச்சர் மங்கள சமரவீர, அமைச்சர் ஹர்ஷ டி சில்வா, வெளிவிவகாரச் செயலர் பிரசாத் காரியவசம், ஜனாதிபதியின் முன்னாள் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, மற்றும் இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து உள்ளிட்ட பல வெளிநாட்டு தூதுவர்கள், இராஜந்திரிகளும் அமெரிக்கத் தூதுவரின் இல்லத்தில் நடந்த பிரியாவிடை நிகழ்வில் பங்கேற்றனர்.


இலங்கையில் இருந்து புறப்படுவது தொடர்பாக அதுல் கெசாப் வெளியிட்டுள்ள கீச்சகப் பதிவு ஒன்றில், தாம், இலங்கையின் அனைத்து மக்களினதும் மகிழ்ச்சி, அமைதி, சுதந்திரம், மற்றும் செழிப்புக்காக பிரார்த்தனை செய்கிறேன் எனவும், அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் எனவும் கூறியுள்ளார்.

அதேவேளை, இலங்கைக்கான புதிய அமெரிக்க தூதுவராக அலய்னா பி ரெப்லிட்ஸ் பொறுப்பேற்கவுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட அவர் செனட் அங்கீகாரத்துக்காக காத்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

# கொழும்பில் கடலை நிரப்பி 85 ஏக்கரில் கடற்கரைப் பூங்கா

### கொள்ளுப்பிட்டி முதல் தெகிவளை வரை



கொழும்பு நகரில், கொள்ளுப்பிட்டி தொடக்கம் தெகிவளை வரை கடலை நிரப்பி கடற்கரைப் பூங்கா ஒன்று அமைக்கப்படவுள்ளது. 30 கோடி டொலர் செலவில் இந்தத் திட்டம் இலங்கை அரசால் முன்னெடுக்கப்படவுள்ளது.

தற்போது கொழும்பில் காலிமுகத்திடலை ஒட்டியதாக – கடலை நிரப்பி உருவாக்கப்பட்டு வரும் கொழும்பு துறைமுக நகரப் பணிகள் முடிவடைந்ததும் கடற்கரைப் பூங்காவை அமைக்கும் பணிகள் தொடங்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்துக்கு அமைச்சரவை கடந்தவாரம் இணக்கம் தெரிவித்தது என இலங்கையின் பெருநகர, மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் செயலர் நிகால் ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, கொள்ளுப்பிட்டி தொக்கம் தெகிவளை வரை – கடலை நிரப்பி, 85 ஏக்கர் பரப்பளவு கொண்ட கடற்கரை புதிதாக உருவாக்கப்படவுள்ளது.

உலகத் தரம்வாய்ந்த இந்த செயற்கைக் கடற்கரை, சுற்றுலாப் பயணிகளை கவரும் பல்வேறு அம்சங்களைக் கொண்டதாக இருக்கும்.

இங்கு ஒரே நேரத்தில் 50 ஆயிரம் பேர் வருகை தரும் வகையிலும், 3000 வாகனங்கள் தரித்து நிற்கும் வகையிலும், வசதிகள் செய்யப்படவுள்ளன.

கடற்கரைப் பகுதியில் இருந்து 80 மீற்றர் வரையிலும், தெகிவளைப் பகுதியில் 200 மீற்றர் வரையிலும் – கடலுக்குள் புதிய நிலப்பரப்பு உருவாக்கப்படும்.

புதிதாக உருவாக்கப்படும் 85 ஏக்கர் நிலப்பரப்பில், 20 ஏக்கர் வணிகர், இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனத்தின் வணிக அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும்.

இதனை நடைமுறைப்படுத்தும் நிறுவனம், தமக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் வணிக மற்றும் வதிவிட கட்டுமானங்களை உருவாக்க முடியும். இதற்காக, 30-40 ஆண்டு குத்தகை உடன்பாட்டைச் செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த உலகத்தரம் வாய்ந்த கடற்கரையில் நீர்வாழ் உயிரினங்களின் பூங்கா, கடல் விமானங்களை இயக்கும் அலகு, நீர் விளையாட்டுகள், சுழியோடும் வசதிகளையும் கொண்டிருக்கும்.

அதேவேளை, கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை முன்னெடுக்கும் சீன நிறுவனமே இந்த திட்டத்தையும் முன்னெடுக்க வாய்ப்புகள் உள்ளன என நம்பப்படுகிறது.

## அமெரிக்கா செல்ல பசிலுக்கு அனுமதி



முன்னாள் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷ மருத்துவ சிகிச்சைகளுக்காக அமெரிக்கா செல்வதற்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி இந்த அனுமதியை வழங்கியுள்ளார்.

இதன் பிரகாரம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கிடையில் அமெரிக்கா செல்வதற்கு முன்னாள் அமைச்சருக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

திவிநெகும திணைக்களத்தின் நிதியை பயன்படுத்தி ஜி.ஐ. குழாய்களை விற்பனை செய்து அவற்றை தேர்தல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தியமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முழு அமைச்சரவை அமைக்க ஆளுநருக்கு முதல்வரின் ஆலோசனை உடன் அவசியம்

### வடக்கு மாகாண சபையில் தீர்மானம்

மக்களுக்குச் சேவை வழங்கக்கூடிய நிறைவேற்றுத் தீர்மானங்களை எடுக்க இயலாத நிலையில் வடக்கு மாகாண சபை நிர்வாகம் பூரணமாக முடங்கும் நிலையில் உள்ளமையையும், அரசமைப்பு மீறல் ஒன்று இடம்பெறும் என்ற அச்சம் எழுந்துள்ளமையையும் கருத்தில் கொண்டு முழுமையான அமைச்சரவையை உருவாக்கும் ஆலோசனையை ஆளுநருக்கு முதலமைச்சர் வழங்கவேண்டும்.

– இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்றை 19 மாகாண சபை உறுப்பினர்கள் இணைந்து நேற்று எடுத்துள்ளனர்.

இந்தத் தீர்மானம் முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரனுக்கு அனுப்பிவைக்கப் படவுள்ளது. (தீர்மானத்தின் முழு விவரம் நாளை வரும்).

## எந்தத் துப்பாக்கியும் என்னிடம் இல்லை

### அடித்துச் சொல்கிறார் அனந்தி

யாழ்ப்பாணம், ஜூலை 17

என்னிடத்தில் எந்தவகையான துப்பாக்கியும் இல்லை. மக்கள் என்மீது கொண்டிருக்கின்ற அன்பை ஜீரணிக்க முடியாத அரசியல் காழ்ப்புணர்ச்சியாளர்களே பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றார்கள்.

– இவ்வாறு வடக்கு மாகாண மகளிர் அலுவல்கள் அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் திட்ட வட்டமாகத் தெரிவித்துள்ளார்.

வடமாகாண மகளிர் அலுவல்கள் அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன், பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்று கைத்துப்பாக்கி ஒன்றை வைத்துள்ளார் என்று வடமாகாண சபை ஆளும் கட்சி உறுப்பினர் அயூப் அஸ்மின் தெரிவித்தார்.

வடமாகாணசபையில் நேற்று இடம்பெற்ற 127 ஆவது அமர்வில் உரையாற்றும்போதே அஸ் மின் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவரது இந்தக் கருத்தை அடியோடு மறுத்துள்ள மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன், நேற்று அனுப்பி வைத்த ஊடக அறிக்கையிலேயே இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு :–

விடுதலைக்கான பயணத்தில் பெண்களும் ஆண்களுக்கு நிகராகவே உரமூட்டப்பட்டுள்ளனர். அந்த அடிப்படையிலிருந்து மக்கள் சேவைக்காக அரசியலுக்குள் பிரவேசித்த ஒருவராகவே நான் இருக்கின்றேன். நாங்கள் உயிரை துச்சமென கருதி முடிவெடுத்தவர்கள். எமது வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக அரசியலுக்கு வரவில்லை.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவருக்கு வழங்க வேண்டிய பாதுகாப்பை வழங்க வேண்டியது சம்பந்தப்பட்டவர்களின் பொறுப்பாகும்.

தனிப்பட்ட அரசியல் காழ்ப்புணர்ச்சியால் எனது செயற்பாடுகளை முடக்குவதற்காக பெண் என்று கூடப் பாராது சில நபர்கள் எத்தகைய நிலைக்கும் செல்லக்கூடியவர்களாக இருக்கின்றார்கள். இத்தகைய அச்சுறுத்தல்களால்தான் நான் பாதுகாப்பை அதி

(18 ஆம் பக்கம் பார்க்க...)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபடுவார்கள் சட்டத்தரணிகள். வெளியே வரும்போது 'ஹாய்' என்று தோளில் கைபோடாத குறையாக நண்பர்களாக உறவாடுவார்கள். இந்த Sportiveness சட்டத்தரணிகளுக்கு உண்டு.

சுமந்திரனை சில சமயங்களில் ஊடகவியலாளர்கள் போட்டுத்தாக்குவார்கள். சில சமயங்களில் சுமந்திரனே ஊடகவியலாளர்களையோ, ஊடங்களையோ போட்டுத் தாக்குவார். ஆனால் அன்று மாலையே தொலைபேசி அழைப்பை எடுத்தால் அதையெல்லாம் மறந்து ஒதுக்கி வைத்து விட்டு பழைய நட்புரிமையுடன் செய்தி பரிமாறுவார். சற்று முன்னர் இடம்பெற்ற கசப்புணர்வு ஒரு சொல்லுக்குத் தன்னும் எதிரொலிக்காது. நல்ல பண்பியல்பு அது.

கடந்த வருடம் கொழும்பு இந்துக் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொழும்பில் ஒரு விவாதம் நடந்தது. அரசியல் தலைப்பு. பிரதம விருந்தினர் சுமந்திரன்தான். அவரை வைத்துக் கொண்டு யாழ் இந்து அணியினர் அவரைப் போட்டுத்தாக்கோ தாக்கு என்று வைதார்கள். அரங்கம் அதிர்ந்தது. எல்லாவற்றையும் முகம் சுளிக்காமல் சிரித்தபடி செவி மடுத்தார் சுமந்திரன். அது பற்றிய வீடியோ பதிவு எல்லாம் சமூக வலைத்தளங்களில் வைரலாகப் பரவியது. நானும் பார்த்தேன். ரசித்தேன். சுமந்திரன் தரப்பை 'பையன்கள்' போட்டுப் பிடித்தமை உண்மையில் சுவையாகத்தான் இருந்தது.

இரண்டொரு நாள் கழித்து விவாதப் போட்டியில் கலந்து கொண்ட ஒரு மாணவனைச் சந்தித்தேன். சுமந்திரன் குறித்து அந்த மாணவன் அதிசயித்துப் போய் வியப்பின் உச்சத்தில் இருந்தான்.

*"என்ன ஸேர்... நாங்கள் அந்தப்பிடி பிடித்தோம். விவாதம் முடிந்ததும் மேடைக்கு வந்து எங்களைப் பாராட்டினார். முகத்தில் ஒரு சிறு அதிருப்தி கூட இல்லை. எங்கள் விவாதத் திறனை மெச்சி அதை மேம்படுத்த வழி கூறினார். எதிர்த் தரப்பையும் எப்படி மதிப்பது என்பதை அந்த விவாத அரங்கில் அவரிடமிருந்து நாம் கற்று வந்தோம்."* – என்றான் அந்த மாணவன்.

இன்று சுமந்திரன் பற்றிய செய்தி ஒன்றைக் கூறி ஒரு நாரதர் கலகத்தையும் ஆரம்பித்து வைக்கலாம் என உத்தேசம்.

அதற்கு முன்னர் ஓர் ஆங்கிலச் சொல் ஒன்றின் அர்த்தத்தைக் குறிப்பிட விரும்பினேன்.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்திலும் பின்னரும் அந்தச் சொல் பிரபலம். அது 'TRIO' – மூவர் அணி.

அச்சமயத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் உயர்நிலையில் விடயங்களைக் கையாண்டு சுமுகமாகத் தீர்க்கவும் தந்திரோபாயங்களைக் கூட்டாக வகுத்துச் செயற்படவும் இரு தரப்பிலும் மூவர் அணி அமைக்கப்பட்டது.

இலங்கைத் தரப்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரு சகோதரர்கள் அதில் அடங்குவர். ஒருவர் பாதுகாப்புச் செயலராக இருந்த கோட்டாபய. மற்றவர் ஜனாதிபதி மஹிந்தவின் ஆலோசகரும் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ. மூன்றாவது நபர் – ஜனாதிபதி மஹிந்தவின் செயலாளரான லலித் வீரதுங்க.

இந்தக் கோட்டா – பஸில் – லலித் மூவரணியுடன் இந்தியத் தரப்பில் இந்தியப் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர், வெளிவிவகார அமைச்சின் செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் என மூவரணி சந்தித்துக் கலந்துரையாடும். புதுடில்லியிலும் கொழும்பிலும் நடைபெறும் இந்தச் சந்திப்புகள் பற்றிய செய்திகள் அப்போது பரபரப்பாக வெளிவரும்.

அது போன்ற மூவரணி ஒன்று பற்றிய செய்தியைத்தான் இப்போது கூற விரும்புகிறேன். இந்த மூவரணி இப்போது தமிழரசுக்குள் மேலெழுந்து வருகின்றது

'சம்பந்தன் – சுமந்திரன் – மாவை' என்ற மூவர் அணி விடயத்தை விடுங்கள். அதையும் தாண்டிய ஓர் அணி இது.

கடந்த சனியும், ஞாயிறும் சுமந்திரனின் தொலைபேசிக்கு அழைப்பு எடுத்தால் அவர் வெளிநாட்டில் என்று தகவல் வந்தது. என்னவென்று விசாரித்தால் அவசரமாக பாரிஸுக்கு ஒரு நாள் விசிட் அடித்திருக்கிறார் அவர். என்ன பின்னணி என்று துருவினேன்.

அடுத்த தேர்தலுக்குத் தயாராகிறது போலும் தமிழரசுக் கட்சி. அதன் வெளிநாட்டு ஊக்குவிப்பாளர்களோடு ஒரு கூட்டம். லண்டன், கனடாவிலிருந்தெல்லாம் சுமார் ஒரு டசின் பேர் வந்திருந்தனர். வியூகங்கள், தந்திரோபாயங்கள் வகுக்கப்பட்டன என்று தகவல். அந்தக் கூட்டத்தில் நிலைமையை விளக்க என்று மட்டுமே ஒரு நாள் பாரிஸுக்கு அவசர விசிட் அடித்தார் சுமந்திரன். அப்படி என்றால் அந்தக் கூட்டத்தின் முக்கியத்துவம் உங்களுக்குப் புரியும். வழமைபோல வரப்போகும் தேர்தல்களில் தமிழரசுக்கு 'லைவ் வயர்' இந்தத் தரப்புக்கள்தான் என்று பேச்சு.

இங்குதான் அந்த Trio (மூவரணி) வருகிறது. இந்த உயிர் வழங்கும் குழுவைச் சந்தித்த தமிழரசு அணியைத்தான் மூவரணி என்கிறேன். யார் தெரியுமா அவர்கள்?

சுமந்திரன், மாவை, யாழ் மேயர் இமானுவல் ஆர்னோல்ட்.

மாவையும், ஆர்னோல்ட்டும் நேரத்துடனேயே போய் நின்று கூட்டத்தை ஏற்பாடு செய்ய கூட்ட நேரத்தில் கனகச்சிதமாகப் போயிறங்கி 'லெக்ஸர்' அடித்து விட்டுத் திரும்பியிருக்கிறார் சுமந்திரன்.

கடந்த வருடமும் மாவை, ஆர்னோல்ட், சுமந்திரன் அணி கனடாவில் போய் இறங்கி வேலை செய்த போதுதான் யாழ் மேயர் பதவிக்கு ஆர்னோல்ட்டை நிறுத்தும் முடிவு கனடாத் தரப்பால் எடுக்கப்பட்டு, இங்கு 'வெற்றிகரமாக' நுழைக்கப்பட்டது என்பது வாசகர்களுக்கு நினைவிருக்கும்.

இப்போது தமிழரசுக்குள் மூவரணி ஒன்று தனியாக மேலோங்கி வருகின்றது என்பதைக் குறிப்பிட்டு என் நாரதர் வேலையையும் முடிக்கலாம் என நினைக்கின்றேன்.

முந்தி வந்த காதை பிந்தி வந்த கொம்பு மறைப்பது போல – கட்சிக்குள் முந்தி வந்து முன்னிலை எடுத்த ஸ்ரீதரன், சரவணபவன் எம்.பிக்களை வெட்டிக் கொண்டு, கட்சி நிர்வாகத்தை வழிநடத்தும் உயரிய இடத்துக்கு சுமந்திரன், மாவையோடு முன்னேறி விட்டார் ஆர்னோல்ட். சுமந்திரனின் வலது கை என்றாலும் (சிலர் அல்லக்கை என்பார்கள்) ஆள் சூரன்தான். வலு கெட்டிக்காரன். பிரதமர் வரை சகலரையும் கையில் போட்டுக் காரியமாற்றக் கூடியவர் என்பதால் கட்சிக்குள் வேகமாக லேலை முந்து வருகின்றார். மாவைக்கு ஜல்ரா போட்டு கட்சிக்குள் மேலெழ நினைக்கும் வயோதிப மடங்களுக்கும் இளைஞர் ஆர்னோல்ட் நல்ல ஆப்புத்தான் பாருங்கோ...!

-மின்னல் -

## தீர்ப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எனது அமைச்சுப் பதவி குறித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை முதலமைச்சர் சீ.வீ. விக்னேஸ்வரன் ஏற்றுக்கொண்டால் நான் எனது பதவியிலிருந்து விலகுவதற்குத் தயாராக உள்ளேன்.

வடக்கு மாகாண அமைச்சர்களை நியமிக்கும் விடயத்தில் – அதிலும் குறிப்பாக எனது விடயத்தில் – பிழையை விட்ட முதலமைச்சர் தொடர்ச்சியாக அந்தப் பிழையை மறைத்துக் கொண்டு தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்ற அடிப்படையில் நடவடிக்கைகளை நகர்த்துகிறார். நான் பிடித்த முயலுக்கு நாலு கால் என்பதை நான் நிரூபித்துள்ளேன். இன்னும் சில விடயம் நிரூபிப்பதற்குத் தயாராக உள்ளேன்.

சாதாரண ஒரு நபர் இவ்வாறான பிழையை விட்டிருந்தால் மன்னிக்கலாம். ஆனால் ஒரு நீதியரசர் பிழை விட்டுள்ளார். தனக்கு அமைச்சர்கள் தொடர்பாகக் கிடைத்த முறைப்பாட்டைச் சரியாகக்கையாளாமைதான் இந்தப் பிரச்சினை எழுவதற்கு முதற் காரணம்.

குறிப்பிட்ட முறைப்பாடுகள் தொடர்பில் பிழை செய்தவரைக் காப்பாற்ற முதலமைச்சர் முயல்கிறாரா என்ற சந்தேகம் உள்ளது. அதேபோல இப்போது வரை எந்த அமைச்சர், எவ்வளவு ஊழல் செய்தார் என்பதற்கான பதில் முதலமைச்சரிடம் இல்லை.

ஊழல் செய்வதற்கு நான் வரவில்லை. இரவு பகலாகப் பாடுபட்டோம். அதற்குப் பதிலாக எம்மைப் பயன்படுத்திவிட்டுத் தூக்கி வீசிவிட்டார்கள்.

அமைச்சர்களை விசாரிப்பதற்குச் சட்டரீதியாக குழு நியமிக்காதபோதும் நாம் விசாரணைக்குழு முன் தோன்றியிருந்தோம். எம்மீது குற்றம் சாட்டப்படவில்லை.

ஒரு அமைச்சர் மீது அபாண்டமாகப் பழி சொல்லிய மாகாண சபை உறுப்பினர் ஒருவரை அமைச்சராக்கித் தன் அருகில் முதலமைச்சர் வைத்துள்ளார். அமைச்சுப் பதவி வேண்டும் என்றால் நான் கொடுத்திருப்பேன் அல்லது எனது குற்றச்சாட்டை நிரூபித்திருக்க வேண்டும். குற்றம் சுமத்தப்படாது இருக்கும்போது ஏன் எம்மை மீண்டும் விசாரணைக் குழு முன் தோன்றச் சொன்னார்?.

படிப்படியாகத் தவறை முதலமைச்சர் விட்ட வண்ணமே இருந்தார். விசாரணைக் குழுவின் சிபாரிசின் பின்னர் கொடுத்த விடயத்தை ஏன் அமுல்படுத்தவில்லை? கட்டாய விடுமுறையில் ஏன் போகச் சொன்னார்? அதனால் தான் இந்த பிரச்சினை தலை தூக்கியது.

பல விடயங்களைத் திரிபுபடுத்தி ஒன்றுக்கு பின் ஒன்றாகத் தவறைச் செய்தார். நீதியரசர் என்ற விடயத்துக்கு முரணாக நடந்தார். எமது நற்பெயருக்குக் களங்கம் விளைவித்தால்தான் நான் நீதிமன்றுக்குச் சென்றேன்.

எனக்கு ஓர் இலட்சியம் இருந்தது. முன்னாள் போராளிகளுக்கு உதவி செய்வது மற்றும் விபத்து இல்லாத மாகாணமாக வடக்கு மாகாணத்தை மாற்றுவது. இந்த இரு இலக்கும் முதலமைச்சரின் செயற்பாட்டால் என்னால் அடைய முடியாமல் போய் விட்டது.

பதவி ஏற்று மறுதினம் இராஜினாமா செய்யத் தயாராக இருந்தேன். ஆனால் தற்போது முதலமைச்சர் மேன்முறையீடு செய்துள்ளார். அதன் ஊடாக என்ன நடவடிக்கை எடுத்தாலும் அதற்குப் பதில் தரவும் எதிர்த்துப் போராடவும் தயாராக இருக்கிறேன்.

முதலமைச்சரான நீதியரசர் முதலில் இடைக்காலக் கட்டளையைப் பார்க்க வேண்டும். தீர்ப்பு வழங்கிய அந்த நீதிபதி குழுவினர் ஆராய்ந்து பார்க்காமல் தீர்ப்புக் கூறவில்லை.

நீதிரயரசர் எம்மை வழிநடத்த வேண்டியவர். அவரே இந்தப் பிழைவிட்டமை தான் வருத்தம் அளிக்கிறது.

அரசமைப்பைச் சரியாக விளங்கிக் கொள்ளாமல் நாம் இத்தனை ஆண்டுகள் ஆட்சி செய்தோமா என்ற கேள்வி எழுகிறது. எனது விட யத்தில் முதலமைச்சர் ஆளு நருடன் கதைத்து நடைமுறைப் படுத்தி இருக்கவேண்டும். அதைச் செய்யவில்லை. தான் செய்த பிழையைச் சமாளிப்பதற்கு தொடர்ந்து பிழை விட்டுக் கொண்டு உள்ளார்

அமைச்சர் விடயத்தால் வந்த பிரச்சினையை சரிசெய்யவேண்டும் என முதலமைச்சர் நினைத்தால் – தான் விட்டது பிழை என்பதை முதலமைச்சர் ஏற்றுக்கொண்டால், இந்த அமைச்சுப் பொறுப்பை ஏற்காமல் விடுவதற்கும் தயாராக உள்ளேன்.

எனது நடவடிக்கையால் வடமாகாண அபிவிருத்திகள் நடைபெறவில்லை எனக் கூறக் கூடும். அவர் நல்ல பெயர் எடுப்பதற்காகப் பல வழிகளில் செயற்பட்டுக்கொண்டு இருக்கிறார் முதலமைச்சர். ஆனால் நான் எதற்கும் தயாராக உள்ளேன்.

இது சிறு விடயம். சட்டப்படி நாம் அணுக வேண்டும். அரசமைப்பு சார்பாகவோ மனசாட்சிப்படியே நான் பிழை செய்யவில்லை. எனது கட்டளை என்னவென்றால், முதலமைச்சர் இந்த பிரச்சினைக்குத் தீர்வு வேண்டும் என நினைத்தால் தனது பிழையை ஏற்று கொள்ள வேண்டும். அவர் ஏற்றுக் கொண்ட மறுகணமே எனது முடிவு வேறாக இருக்கும்.

சிவாஜிலிங்கத்தைப் போல் நான் அரசியல் கோமாளி அல்லன். தொடர்ச்சியாக எனக்கு அமைச்சுப் பொறுப்பு வந்தால் சிவாஜிலிங்கத்துக்குக் கொடுப்பேன். – என்றார். (ஐ-7)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## புதிய அரசமைப்பு நகலுக்கான மூல ஆவணம் நாளை வருகிறது

**நீண்ட கால முயற்சிகள், இழுபறிகள், விவாதங்கள், ஆராய்வுகள், கலந்துரையாடல்கள் என்பவற்றின் பின்னர் புதிய அரசமைப்புக்கான நகலுக்குரிய அடிப்படை ஆவணம் நாளை வழிகாட்டல் குழுவுக்கு வருகின்றது.**

**அந்த ஆவணம் ஏதேனும் மாற்றங்களுடன் புதிய அரசமைப்பு முயற்சிகளுக்கான நகலாக – அடிப்படையாக – ஏற்றுக் கொள்ளப்படுமா என்பது பெரும்பாலும் நாளை தெரியவரலாம்.**

**சில சமயங்களில் நாளை அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அதனைப் பெற்றுக் கொண்டு, அது குறித்துத் தத்தமது கட்சித் தலைமைகளுடனும், தரப்புகளுடனும், விவாதித்து, ஆலோசித்த பின்னரே முடிவைத் தெரிவிக்கலாம் என்று கூறிவிட்டு நாளைய கூட்டத்திலிருந்து கலையவும் வாய்ப்புண்டு.**

**இப்போது நிபுணர் குழுவினால் தயாரிக்கப்பட்டிருக்கும் ஆவணத்தைக் குறைந்த பட்சம் நகல் யாப்பாக ஏற்று, அதனடிப்படையில் விவாதத்தைத் தொடங்கலாம் என்ற இணக்கத்தைக் காண்பதற்கே இன்னும் எவ்வளவு நீண்ட காலம் எடுக்கும் என்பதே கேள்வி.**

**இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகக் காலத்துக்குக் காலம் எடுக்கப்பட்ட முயற்சிகள் எல்லாம் 'சாண் ஏற முழம் சறுக்கும் கதையாகவே' இருந்து வந்துள்ளன என்பது மறுக்கற்பாலதன்று.**

**ஆனாலும் இந்த ஒவ்வொரு முயற்சிகளின்போதும் ஏதேனும் ஸ்திரமான ஆவணம் ஒன்று எழுத்தில் உருவாகி, வரலாற்றுச் சான்றாகப் பதிவாகி நிற்பதும் அவதானிக்கத் தக்கதாகும்.**

- **பண்டா – செல்வா ஒப்பந்தம்**
- **டட்லி – செல்வா ஒப்பந்தம்**
- **திம்புக் கோட்பாடு**
- **இலங்கை – இந்திய ஒப்பந்தம்**
- **13 ஆவது அரசமைப்புத் திருத்தம்**
- **ஜனாதிபதி பிரேமதாஸ காலத்தின் மங்கள முனசிங்க குழுவின் அறிக்கை**
- **சந்திரிகா அரசின் 2000 ஆம் ஆண்டின் நகல் யாப்பு**
- **மஹிந்த ராஜபக்ஷ காலத்தின் சர்வ கட்சிப் பிரதிநிதிகள் மற்றும் நிபுணர் குழுவின் அறிக்கை.**

**– இப்படி இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக முயற்சிகள் எடுக்கப்பட்ட ஒவ்வொரு தடவையும் அவை தடைப்பட்ட போதிலும், அவற்றின் பெறுபேறாக ஏதேனும் வலுவான ஆவணங்கள் வெளிவந்தே இருக்கின்றன.**

**அவை ஒவ்வொன்றும் தமிழரின் தேசிய இனப் பிரச்சினையின் ஆழத்தையும் அதற்குள் புதைந்திருக்கும் நியாயத்தையும் எடுத்தியம்பியே நிற்கின்றன.**

**நாளை, அரசமைப்பு வழிகாட்டல் குழுவுக்கு சமர்ப்பிக்கப் படப்போகும் அரசமைப்பு நகல் வடிவத்துக்கான மூல ஆவணம் கூட அத்தகைய அடிப்படைகளைக் கொண்டிருப்பது கவனிக்கத்தக்கதாகும்.**

**இந்தப் புதிய அரசமைப்பு உருவாக்க விவகாரத்தில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.**

**நாட்டின் ஆட்சி முறைமை, நிறைவேற்று அதிகாரம், தேர்தல் சீர்திருத்தம், அதிகாரப் பகிர்வு எனப் பல்வேறு தரப்பட்ட தலைப்புகளில் நீண்ட பல நாள்களாக மரதன் விவாதங்களும் ஆராய்வுகளும் நடைபெற்று முடிந்த பின்னரே இந்த ஆவணம் தயாராகியுள்ளது.**

**இந்த விவகாரங்களில் பல தொடர்பிலும் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு இடையில் இன்னும் முரண்பாடுகளும், கருத்து வேறுபாடுகளும் உள்ளன. துருவமயமாக்கப்பட்ட நிலைப்பாடும் கூட உண்டு.**

**ஆனால், அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தப்பட்ட விடயத்தில் – இந்த ஆவணம் தொடர்பில் – கட்சிகளிடையே எந்த முரண்பாடும் இல்லை. அனைத்துத் தரப்புகளும் சேர்ந்தே இந்த அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகளுக்கு கொள்கை அளவில் இணங்கியிருக்கின்றன.**

**அந்த வகையில் இந்த ஆவணம் குறிப்பிடத்தக்க முன்னேற்றகரமான ஒன்று எனச் சிலாகித்துக் கூறமுடியும்.**

**இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பதற்காகக் காலம் காலமாக எடுத்து வந்த முயற்சிகள் ஒவ்வொரு தடவையும் இறுதிக் கட்டத்தில் குழம்பிப் போவது போல, இப்போதைய முயற்சிகள் கூடக் குழம்பிப் போகலாம். அதற்கான ஏது நிலைகளே – சாத்தியக்கூறுகளே – அதிகம் தென்படுகின்றன. தென்னிலங்கை அரசியல் போக்கு, அங்கு மீளவும் தீவிரம் பெற்று வரும் சிங்கள, பௌத்த கடும் போக்காளர்களின் மீளெழுச்சி என்பன அதற்கே கட்டியம் கூறுகின்றன.**

**அப்படி நிகழ்ந்தால், அது தமிழரின் நம்பிக்கை, எதிர்பார்ப்பில் – விழுந்த மற்றோர் அடியாகும்.**

**என்றாலும் நாளை சமர்ப்பிக்கப் போகும் புதிய அரசமைப்புக்கான நகலுக்குரிய மூல ஆவணம், அதிகாரப் பகிர்வுக்கான ஓர் அடிப்படை அம்சத்தைப் பிரதிபலித்து நிற்கும் என்பது ஒரு சாதக நிலைதான்.**

## முல்லை. மாவட்ட காணாமற்போனோரின் போராட்டத்துக்கு நாளை 500 ஆவது நாள்

முல்லைத்தீவு, ஜூலை 17

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை மீட்பதற்காகக் கடந்த வருடம் மார்ச் மாதம் 8 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாகக் கூடாரம் அமைத்து ஆரம்பித்த மக்கள் போராட்டம் எந்தத் தீர்வுக்களுமின்றி தொடர்கிறது. அது நாளை 500ஆவது நாளைக் கடக்கிறது.

"இதுவரை எமக்கான எந்த தீர்வும் கிடைக்கவில்லை. அரசு எமக்குப் பதில் வழங்காது. இதனாலேயே நாம் ஐ.நா. அமர்வில் சென்று எமது நிலைப்பாட்டைக் கூறி சர்வதேச விசாரணையே எமக்குத் தேவை எனக் கோரினோம்.

காணாமற்போனோர் அலுவலகம் எமக்கு எதையும் செய்யாது. அது அரசின் திணிப்பு. அதனாலேயே நாம் அதனையும் எதிர்த்தோம்.

500 ஆவது நாளில் எமது போராட்டத்துக்குப் பலம் சேர்க்க அனைவரும் ஒன்றிணையுங்கள்" என அங்கு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமற்போனோரின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

## டெனிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண சபை சுமூகமான முறையில் இயங்குவதற்கு முதலமைச்சர் ஆவன செய்ய வேண்டும்."

–இவ்வாறுநேற்றுக்கோரிக்கை விடுத்தார் வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா.

மாகாணசபையின்நேற்றைய விசேட அமர்வில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த அமர்வின்போது நான் சபையில் பிரசன்னமாக இருக்காவிட்டாலும் இங்கு நடைபெற்ற சகல நடவடிக்கைகளையும் கூர்மையாக அவதானித்துள்ளேன். இங்கு பல உண்மைக்குப் புறம்பான விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளமையை கவனத்திற்குக்கொண்டுவர விரும்புகின்றேன்.

அரசமைப்பின் 154கு (6) இற்கு அமைய அமைச்சர்கள் சபை மாகாண சபைக்குக் கூட்டாகப் பொறுப்புடையதாதலும், வகைசொல்ல வேண்டியதாதலும்வேண்டும்எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. பொறுப்புக் கூறல் அல்லது வகைசொல்லல் என்பது வெறுமனே ஏதோ வாயில் வந்ததைக் கூறுவதாக அமைய முடியாது. அது உண்மையானதாகவும், பொறுப்புடன் கூறப்படுவதாகவும் அமைதல் வேண்டும். உண்மையைத் திரிபுபடக் கூறுவது கூடப் பொய்யுக்குச் சமனாகும்.

கடந்த அமர்வின்போது சயந்தன் அவர்களால் உங்கள் அமைச்சர்கள் யாவரென்று அறியத்தாருங்கள் என்று ஆளுநர் முதலமைச்சரிடம் கோரியுள்ளார் என்று கூறப்பட்டது. அவ்வேளையில் குறுக்கிட்ட முதலமைச்சர், தன்னிடம் அப்படியொன்றும் கேட்கப்படவில்லை எனக் கூறியிருக்கின்றார். ஆளுநர் அவ்வாறு கோரி 05.07.2018 இல் அனுப்பிய கடிதமும், அந்தக் கடிதம் முதலமைச்சர் காரியாலயத்திலும் மற்றும் கோவில் வீதியிலுள்ள அவரது உத்தியோக பூர்வ வதிவிடத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான ஆதாரங்களும் என்னிடம் உள்ளன. இது ஓர் முக்கிய விடயமாதலால் மறு நாள் 06.07.2018ஆம் திகதியன்றும் ஓர் நினைவூட்டல் கடிதமும் விரைவுத் தபாலில் அனுப்பப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலில் முதலமைச்சர், தன்னிடம் அப்படியொன்றும் கேட்கப்படவில்லை என்று சபைக்கு விளம்பியமை இந்தச் சபையை அவமதித்த செயலாகவே கருத வேண்டியுள்ளது.பொறுப்புடன்பதிலளிக்க வேண்டிய நீதியரசர் முதலமைச்சர் இச் சபையைத் தவறாக வழிநடத்தியுள்ளார்.

அடுத்து இச் சபையில் கடந்த அமர்வின்போது முதலமைச்சரால் இம் மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பு தொடர்பாக ஓர் விளக்கவுரை ஆற்றப்பட்டுள்ளது.அவ்விளக்கவுரையிலும்எவ்வாறு உண்மைக்குப் புறம்பான விடயங்கள் திரிபுபடுத்திக் கூறப்பட்டுள்ளன என்பதனையும் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். அவரது உரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு விடயம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின்தீர்மானத்தின்படி எந்தவொரு மாகாண முதலமைச்சர் தானும் தமது அமைச்சர்குழாமின்அமைச்சர்ஒருவரை நியமிக்கவோ, பதவியிறக்கவோ முடியாது என்று கருத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு முதலமைச்சர் கூறியிருப்பது உண்மையைத் திரிபுபடுத்திக் கூறியிருக்கும் ஓர் செயலாகும். இலங்கை அரசமைப்பின் பிரிவு 154கு(5) இற்குஅமையஆளுநர்பிரதான அமைச்சரின்ஆலோசனைமீது அந்த மாகாணத்திற்கென அமைக்கப்பட்ட மாகாண சபையின் உறுப்பினர்களிலிருந்து ஏனைய அமைச்சர்களை நியமித்தல் வேண்டும். அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரம் மட்டும்தான் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளதே அன்றி அமைச்சர்களை நீக்கும் அதிகாரம் குறிப்பிடப்படவில்லை.பொதுவாகஒரு பதவிக்கு நியமிக்கும் அதிகாரம் யாரிடமுள்ளதோ நீக்கும் அதிகாரமும் உள்ளதென்பதனை "மறைமுக ஒப்பு" implied என்று சொல்வார்கள்.

இந்திய அரசமைப்பின் பிரிவு 164(1) மாநிலங்களின் முதமைச்சர்களையும், அமைச்சர்களையும் அமைப்பது தொடார்பாக எமது அரசமைப்பில் உள்ளது போல் ஏனைய அமைச்சர்கள் முதலமைச்சரின் ஆலோசனையில் ஆளுநரால் நியமிக்கப்படுவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அங்கும் அமைச்சர்களை நீக்கும் அதிகாரம் யாரிடமென்று குறிப்பிடப்படவில்லை.

இங்கு இன்னொரு விடயத்தையும் கூற விரும்புகின்றேன். இந்த நாட்டில் அரசமைப்பு என்ற ஒன்று இருக்கின்றது, அதில் என்ன விடயங்கள் கூறப்பட்டிருக்கின்றன என்பது கூடத் தெரியாமல் உறுப்பினர் ஒருவர் ஊடக சந்திப்பொன்றில் கருத்துத் தெரிவித்திருக்கின்றார். முதலமைச்சர் தான் நியமித்த அமைச்சை, அமைச்சர்களை மாற்றுவதற்கு அதிகாரம் இல்லை என உயர்நீதிமன்றத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளதாக ஊடக சந்திப்பொன்றில் கூறியிருக்கின்றார். என்ன வழக்கு என்ற விவரமே தெரியாமல் அவர் உயர்நீதிமன்றத் தீர்ப்பானது என்று கூறியிருப்பதிலிருந்தே அவர் இந்த விடயங்களை எவ்வளவு சரியாகத் தெரிந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்துக் கூறுகின்றார் என்பது புலனாகும்.

அத்துடன் முதலமைச்சர் தான் நியமித்த அமைச்சர்களை என்று கூறியிருக்கின்றார். அவருக்குத் தெரியாது அமைச்சர்களை நியமித்தவர் முதலமைச்சர் அல்லர், முதலமைச்சரின் ஆலோசனையின் பெயரில் ஆளுநர் என்பது. அவரது இவ்விடயம் தொடர்பான அறியாமையை இட்டு வருந்துகின்றேன்.

அத்துடன் அவர் நின்று விடவில்லை. அந்த ஊடகச்சந்திப்பில் மேலும் கூறுகையில், நான் பல சந்தர்ப்பங்களில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலக வேண்டுமென்று கோரிக்கை விடுத்தும் விலகவில்லை என்றும், அவ்வாறு விலகிவிட்டு முதலமைச்சரைப்பதவிவிலகவேண்டுமென்று கோரிக்கைவிடுத்தால் அது நியாயாமானது என்றும் கூறியிருக்கின்றார். அவருடைய கோரிக்கையை நான் ஏற்று இப்போதே பதவி விலகத் தயாராக இருக்கின்றேன், அவர் கூறியதுபோல் முதலமைச்சர் நடந்த விடயங்களுக்குத் தார்மீகப் பொறுப்பெடுத்து பதவி விலகுவாரே ஆயின்.

முதலமைச்சரால் அமைக்கப்பட்ட வடக்கு மாகாண அமைச்சர்களுக்கெதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைக் குழுவின் அறிக்கையைக் கடந்த வருடம் ஜூன் மாதம் ஆரம்பத்தில் சபையில் சமர்ப்பித்து அதன் பின் ஜூன் 14ஆம் திகதி அந்த அறிக்கையின் பரிந்துரைகள் தொடர்பான தனது நடவடிக்கைகளை அறிவித்தல் என்ற ஏறத்தாழ 4 , 5 மாதங்கள் மாகாணசபையின்நிறைவேற்று செயற்பாடுகள் யாவும் ஓர் ஸ்தம்பித நிலையிலேயே காணப்பட்டன.

அதே போன்று கடந்த மாதம் 29ஆம் திகதி டெனிஸ்வரனால், தன்னை அமைச்சராகத் தொடர்ந்து பணியாற்றுவதற்கு உள்ள தடைகளை நீக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பாக வழக்கின் தீர்ப்பு வந்ததிலிருந்து மாகாண சபையின் நிறைவேற்றுச் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்த நிலையிலேயே இருக்கின்றன. யார் அமைச்சர்கள், யார் நிறைவேற்றுத் துறைக்குப் பொறுப்பு என்ற தெளிவற்ற நிலை மாகாண சபையின்செயற்பாடுகளைமந்த கதிக்கு இட்டுச் சென்றுள்ளது. ஏற்கனவே நொண்டிக்குதிரை போல்மாகாணசபையின்செயற்பாடுகள் வினைத்திறனற்றவையாக இருந்த நிலையில் இவ்வாறான நிகழ்வுகள் முடமாக்கப்பட்ட குதிரையாக மாகாண சபையை மாற்றிக் கொண்டிருக்கின்றது.

நான் முதலமைச்சரைக் கேட்டுக்கொள்வது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளையை ஏற்றுடெனிஸ்வரன் அமைச்சராகப்பதவிவகிப்பதற்கு இருக்கின்ற முட்டுக்கட்டைகளை நீக்கி அரசமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய எல்லாமாக ஐந்து அமைச்சர்கள் இருக்கவேண்டுமென்பதற்கு அமைவாக ஏனையமூவரும்யாரென்பதைத் தீர்மானித்து ஆளுநர் ஊடாக உரியமுறையிற் பரிசீலனை செய்து மாகாண சபை சுமூகமானமுறையில் இயங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும். – என்பதே என்றார். (ஐ)

## நாளை

18.07.2018
வியாழக்கிழமை
நட்சத்திரம் : உத்தரம் பி.ப 2.32 வரை
திதி : ஷஷ்டி மு.இ 8.45 வரை
சுபநேரம் : 4.30 – 6.00 வரை
இராகுகாலம் : 12.00 – 1.30 வரை

# டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு தேவையான எல்லா வைத்திய உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன



## சுகாதார அமைச்சர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு, ஜுலை 17

டெங்கை கட்டுப்படுத்துவதற்குத் தேவையான வைத்திய உபகரணங்கள், சிகிச்சை வசதிகள், வாகனங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் போதுமான அளவில் தேவையான இடங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இவ்வருடத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

கடந்தஆண்டுடெங்குநோயாளர்களின் எண்ணிக்கை 86 ஆயிரம் ஆகும். இவ் வருடத்தில் இதுவரையில் பதிவு செய்யப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 26 ஆயிரம் ஆகும்.

டெங்கு நோயை ஒழிப்பதற்காக 1500 இளைஞர், யுவதிகள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இவர்கள் வீடு வீடாகச் சென்று டெங்கு நோய் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உயரதிகாரிகளிலிருந்து தொழிலாளர்கள் வரையில் மேற்கொண்ட அர்ப்பணிப்பின் காரணமாகவே டெங்கு நோயைக் கட்டுப்படுத்த முடிந்தது என்றும் சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

## ஆசிய பாடசாலை செஸ் போட்டியில் இலங்கைக்கு தங்கப்பதக்கம்



களுத்துறை, ஜுலை 17

களுத்துறையில் நடைபெற்ற பாடசாலைகளுக்கு இடையிலான 14 ஆவது ஆசிய செஸ் போட்டியில் 5 தங்கப்பதக்கங்களை இலங்கை வென்றுள்ளது.

மூன்று பிரிவுகளில் இந்த வெற்றி கிடைத்துள்ளது. இலங்கை உள்ளிட்ட 17 நாடுகளைச் சேர்ந்த 500 வீரர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொண்டனர்.

போட்டியில் வெற்றி பெற்றவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு களுத்துறையில் இடம்பெற்றது.

ஆசிய செஸ் சங்கத்தின் செயலாளர் ஹுசைன் அல் பாஹிர் இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

## தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிலையம்

கொழும்பு, ஜுலை 17

ஆயுர்வேத மருந்துத் தயாரிப்பிற்குத் தேவையான தேங்காய் எண்ணெய்யை உற்பத்தி செய்வதற்காக தயாரிப்பு நிலையமொன்று புதிதாக நிர்மாணிக்கப்பட உள்ளது.

இலங்கை ஆயுர்வேதக் கூட்டுத்தாபனம் இது தொடர்பாகத் தெரிவிக்கையில் இதன் மூலம் வருடாந்தம் 2 கோடி ரூபாவை சேமிக்க முடியும் என்று தெரிவித்துள்ளது.

இலங்கை ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தை புனரமைக்கும் பணிகளின் கீழ் இந்த நிலையம் அமைக்கப்பட இருக்கிறது என இலங்கை ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தின் தலைவர் லால் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த வருட இறுதிக்குள் கூட்டுத்தாபனத்தை புனரமைப்பதற்கு திட்ட மிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வருமானத்தை அதிகரிக்கும் என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா

கொழும்பு, ஜுலை 17

'என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா' இலங்கை வருமானத்தை அதிகரிக்கச் செய்வதுடன் ஏற்றுமதித் துறையையும் இரட்டிப்பாக்கும் என்று கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட பொறியியல் துறை விரிவுரையாளர் கலாநிதி எம். கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

'என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா' திட்டத்தின் கீழ் 10 இலட்சம் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்த முடியுமெனவும், இது 'வின் 2025' தொலை நோக்குத் திட்டமாகும்.

இந்த கடன் திட்டம் 6 வகைகளின் பிரிவின் கீழ் முன்னெடுக்கப்படுகின்றது.

கடன், வட்டி மானிய அடிப்படையில் அரச மற்றும் தனியார் வங்கிகள் மூலம் இதற்கான கடன்கள் வழங்கப்படுகின்றன.

நிதி மற்றும் நிதியல்லாத உதவிகள் 'என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா' திட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

சிறிய மற்றும் நடுத்தர தனிநபர் முதலீடும் முயற்சியாண்மையும் இதன் மூலம் முன்னெடுக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைவதே இதன் நோக்கம் என்றும் கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட பொறியியல் துறை விரிவுரையாளர் கலாநிதி எம். கணேசமூர்த்தி தெரிவித்தார்.

## தென்மராட்சி பிரதேச செயலகத்தின் ஆடிப்பிறப்பு நிகழ்வு பன்றித்தலைச்சி ஆலய முன்றிலில்

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் ஆடிப்பிறப்பு நிகழ்வு மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் கோவில் முன்றிலில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இதுவரை காலமும் பிரதேச செயலகமும் பிரதேச கலாசார அலகினரும், செயலக பணியாளர்களும் இணைந்து பிரதேச செயலக முன்றிலில் ஆடிப்பிறப்பு நிகழ்வை நடத்தி வந்தனர்.

இவ் வருடம் ஆடிப்பிறப்பின் மகத்துவம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளை கிராம மட்டத்தில் நடத்த மேற்கொள்ளப்பட்ட முடிவுகளின் பிரகாரம் மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயத்தில் கொண்டாடப்படவுள்ளது. (இ)

## கொத்மலை வான் கதவுகள் திறப்பு!



கொழும்பு, ஜுலை 17

கடும் மழையை தொடர்ந்து மேல் கொத்மலை நீர் தேக்கத்தின் வான் கதவு ஒன்று நேற்று அதிகாலை திறக்கப்பட்டது.

நீரேந்து பகுதியில் தொடர்ந்து மழை பெய்யுமாயின் நீர் தேக்கத்தின் வான் கதவுகள் உடனடியாக திறக்கப்படும் என்று மின்சார சபை தெரிவித்துள்ளது.

நீர்தேக்கத்தின் அருகில் உள்ள மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# நல்லிணக்க செயற்பாடுகளில் முன்னின்று செயற்பட்டு திறமைகளைக் காட்டிய பள்ளிவாசல்களுக்கு விருது




கொழும்பு, ஜுலை 17

சமூக மேம்பாடு மற்றும் நல்லிணக்க செயற்பாடுகளில் முன்னின்று செயற்பட்டு தமது திறமைகளைக் காட்டிய பள்ளிவாசல்களுக்கு பணப் பரிசில்களும், விருதுகளும் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு அலரி மாளிகையில் சபாநாயகர் தலைமையில் நடைபெற்றது.

ஆலோசனை மற்றும் நல்லிணக்க பேரவையும் (ஏ.ஆர்.சி) முஸ்லிம் சமய விவகார அமைச்சும் இணைந்து இந்த தேசிய மஸ்ஜித் விருது விழாவை நடத்தின.

இந்த நிகழ்வில் தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் எம்.எச்.அப்துல் ஹலீம், அமைச்சர்களான மனோ கணேசன், ரிஷாத் பதியுதீன், இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி, பிரதி அமைச்சர் அலி ஸாஹிர் மௌலானா, நாடாளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான், எஸ்.எம். மரைக்கார், ரவி கருணாநாயக்க அமைச்சின் செயலாளர் மீகஸ்முல்ல, திணைக்களப் பணிப்பாளர் எம்.ஆர்.எம்.மலிக், அகில இலங்கை ஜமிய்யதுல் உலமா சபையின் தலைவர் ரிஸ்வி முப்தி, பேராசிரியர் தம்பர அமில தேரர் மற்றும் ஏனைய சமயத் தலைவர்கள் உள்ளிட்ட பெருந்திரளானவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த விருது வழங்கல் விழாவில் சகல துறைகளிலும் சிறப்பாக செயற்பட்டு வருவதை கருத்திற் கொண்டு கொழும்பு -12, வாழைத்தோட்டம், அல் - மஸ்ஜிதுன் நஜ்மி ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு 5 விருதுகள் வழங்கப்பட்டு அகில இலங்கை ரீதியில் முதல் இடத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இந்தத் தெரிவுகளை மேற்கொண்டு விருதுகளுக்கு மஸ்ஜிதுகளை தெரிவு செய்த தெரிவுக் குழுவினர் 9 பேருக்கும், 5 பௌத்த மதகுருமாருக்கும் அதிதிகளால் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (கு)

## மின்தடை

யாழ்ப்பாணம்,ஜுலை 17

உயர் அழுத்த தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை–

**வவுனியா பிரதேசத்தில் –** பண்டாரிக்குளம் கிராமம், தவசிக்குளம் கிராமம், அட்டம்பஸ்கட கிராமம், கொக்கெலிய இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## போதைப்பொருளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்

### பொது மக்கள் கோரிக்கை

அட்டாளைச்சேனை , ஜுலை 17

அட்டாளைச்சேனை பகுதியில் போதைப்பொருள் பாவனையை முற்றாக தடைசெய்ய அட்டாளைச்சேனை பிரதேச சபையில் தீர்மானம் எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2018 ஆம் ஆண்டின் புகைத்தல், போதைப்பொருள் பாவனையற்ற அட்டாளைச்சேனை பிரதேசத்தை உருவாக்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும் பொருட்டு எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள சபை அமர்வில் விசேட தீர்மானமாக இதனை அனைத்து உறுப்பினர்களும் நிறைவேற்ற வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

## தினசரி ராசி பலன் (17.07.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆனித்திங்கள் 33 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை பஞ்சமித்திதி மாலை 4.19 மணி வரை பின்னர் ஷஷ்டி. நட்சத்திரம்: பூரம் காலை 9.27 வரை பின்னர் உத்தரம்.சித்தாமிர்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - மாலை 3.25 மணி முதல் 4.59 மணி வரை.

**சுபநேரம்** - பகல் 10.32 மணி முதல் 12.02 மணி வரை.

இன்று ஆடிப் பிறப்பு.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - திதி இல்லை.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - பூரம், உத்தரம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். பெண்களின் வாழ்கையில் இதுவரை பட்ட கஷ்டங்கள் குறையும். விடுபட்டுப் போன பிரச்சினைகளுக்கு விடியல் கிடைக்கும்.

**ரிஷபம்** சலனம் மிகுந்த நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் புதிய செலவுகளால் மேலும் பணச் சுமையுடன், கடன் படவும் நேரும். கொடுக்கல், வாங்கலில் தடுமாற்றம் இருக்கும்.

**மிதுனம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதார நிலை சுமாராக இருக்கும். குடும்பத்தில் அலைச்சலும், சச்சரவும் இருக்கும். யாருக்கும் எவ்வித வாக்குறுதியும் கொடுக்கக் கூடாது.

**கடகம்** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். செய்யும் தொழிலிலும், எடுத்த காரியங்களிலும் முன்னேற்றம் உண்டாகும். ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தில் அமோக லாபம் கிடைக்கும்.

**சிம்மம்** சுபீட்சமான நாள். பணம் பல வழிகளாலும் வந்து சேரும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். வேலை வாய்ப்புக் காக காத்திருப்பவர்களுக்கு வேலை கிடைக்கும். ஆடை, அணிமணிகள் சேரும்.

**கன்னி** யோசனையான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். வரவுக்கு மீறிய செலவுகளுடன் தொழிலில் மந்த நிலையும் உண்டாகும். எதிலும் அவதானமாக இருப்பது நல்லது.

**துலாம்** உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். குடும்ப உறவு நன்றாக இருக்கும்.பணிபுரியும் இடத்தில் வசை பாடியவர்களும் இணக்கமாக இருப்பார்கள். இவர்களுக்கு செல்வாக்கு, மரியாதை உயர்வடையும்.

**விருச்சிகம்** விருத்தியான நாள். பொருளாதாரம் மேம்படும். செய்யும் தொழிலில் சுய முயற்சியால் நன்மை அடைவார்கள். சிலர் புனித காரியங்களில் ஈடுபாடு காட்டுவார்கள். உறவினர்களின் ஒத்துழைப்பு இருக்கும்.

**தனுசு** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றம் அடையும். உத்தியோகத்தில் பணியாளர்களுக்கு செல்வாக்கு பெருகும். திறமையின் அடிப்படையில் உயர்வுகள் தானாகக் கிடைக்கும்.

**மகரம்** சஞ்சலம் மிகுந்த நாள். வருமானம் குறையும். எந்தக் காரியமாக இருந்தாலும் சுமையாகவும், பாதியில் விட்டுவிடுவதும் உண்டாகும். மனம் குழப்பமடையும். செய்யும் தொழிலில் தொல்லைகள் உண்டாகும்.

**கும்பம்** மத்திமமான நாள். பொருளாதாரம் சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். குடும்பத்தில் குழப்பமான நிலை உண்டாகும். வியாபாரம் சுமாராக நடக்கும்.

**மீனம்** இனிமையான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். சுப காரியங்கள் தடையின்றி நடக்கும். பெண்களுக்கு புதிய ஆடை, அணிமணிச் சேர்க்கை உண்டாகும்.

சந்திராஷ்டம நாள்; **உத்தராடம் 2ஆம், 3ஆம், 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1ஆம், 2ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

## உடுவில் 'ஜசுபி' பழ தொழிற்சாலைக்கு பிரதி அமைச்சர் அங்கஜன் விஜயம்





சுன்னாகம், ஜுலை 17

சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் அங்கமாக உடுவில் பிரதேசத்தில் தொழிற்படும் தொழிற்சாலைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார் விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன். இந்த நிகழ்வில் சிரேஷ்ட கூட்டுறவுச்சங்க அதிகாரிகள் அவரை வரவேற்று கௌரவித்தனர். சுதந்திரக் கட்சியின் உடுவில் பிரதேச சபை உறுப்பினர் துவாரகனும் இணைந்திருந்தார்.

உள்ளூர் உற்பத்தி பழ வகைகளினாலான தயாரிப்புக்களை வழங்கிவரும் ஜசுபி தொழிற்சாலையின் வள பயன்பாடுகள் குறித்தும் எதிர்காலத்தில் அதன் விஸ்தீரணம் குறித்தும் தொழிற்சாலை அதிகாரிகள் அங்கஜனுக்கு தெரியப்படுத்தியிருந்தனர்.

விவசாய பழ உற்பத்தியாளர்கள் இதனால் பெரிதும் நன்மை அடைகின்றார்கள். பழங்களை சேகரித்தல், நியாயமான முறையில் கொள்வனவு, பதனிடல் போன்றவற்றினால் விவசாய பழ உற்பத்தியாளர்கள் பயன் பெறக் கூடியதாக அமைகின்றது.

விவசாயிகளின் தோழனாக இவ்வாறான சிறிய கைத்தொழில்சாலைகள் கை கொடுக்கும் எனவும் அறுவடை காலங்களில் நிலவும் விலை தளம்பல்களையும் சுதாகரித்துக் கொள்ள கூடியதாக இருக்கும் எனவும் அதில் கூட்டுறவு சங்கங்களின் வகிபாகம் அன்று தொட்டு இன்று வரை அதன் தேற்றம் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

உள்ளூர் உற்பத்தி பொருள்களின் கேள்வி நிரம்பலை அதிகரிக்க வேண்டும் எனவும் களனி சார்ந்தும் இவ்வாறான சிறிய கைத்தொழில் சாலைகளின் வினைதிறன்களை அதிகரிப்பதன் ஊடாக ஆரம்ப காலங்களில் காணப்பட்ட சிறந்த உற்பத்தி தரத்திலான பொருள்களை வழங்கிய தொழிற்சாலைகளை போன்று மீண்டும் நாம் ஊற்றெடுக்க வேண்டும் எனவும் பிரதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

(இ)

## சவூதி அரேபியாவில் வெளிநாட்டு பணியாளர்களுக்கு நன்மையை ஏற்படுத்தும் வகையிலான சட்டங்கள்

சவூதி அரேபியாவில் வெளிநாட்டு பணியாளர்களுக்கு நன்மையை ஏற்படுத்தும் வகையில் சட்டங்கள் கடுமையாக்கப்படவுள்ளன.

சவூதி அரேபியாவில் பணிக்காக செல்லும் வெளிநாட்டு பணியாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தல், சட்டவிரோதமான முறையில் தடுத்து வைத்து சேவை பெறல், உரிய முறையில் சம்பளம் வழங்காமை ஆகிய விடயங்கள் தொடர்பில் கடுமையான நடவடிக்கை மேற்கொள்வதற்கு அந்த நாட்டு அரசு தீர்மானித்துள்ளது.

சவூதி வெளிநாட்டு கடவுச்சீட்டு அதிகார சபை அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனை குறிப்பிட்டுள்ளது. அதற்கமைய வெளிநாட்டு பணியாளர்களின் நம்பிக்கையை கட்டியெழுப்பும் வகையில் நடவடிக்கை மேற்கொள்வதே இதன் நோக்கமாகும்.

எப்படியிருப்பினும் சட்டவிரோதமான முறையில் சவுதியில் தங்கியிருப்பவர்கள் மற்றும் அவர்களுக்கு ஆதரவு வழங்குபவர்களுக்கு கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

அவ்வாறு பாதுகாப்பு வழங்கும் நபர்களுக்கு 15000 சவூதி ரியால் அபராதம் விதிக்கப்படும். உதவுபவர் வெளிநாட்டவராக இருந்தால் அவர் நாடு கடத்தப்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## அரசுக்கு எதிராக இன்று முதல் வேலைநிறுத்த போராட்டம்

### வாசுதேவ தகவல்

கொழும்பு, ஜுலை 17

தற்போதைய அரசுக்கு எதிராக மாபெரும் வேலைநிறுத்த போராட்டம் ஒன்றை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இந்த போராட்டத்தின் மூலம் அரசின் அனைத்து நடவடிக்கைகளையும் முடக்குவதற்கு முயற்சிப்போம் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாளை (இன்று) இந்த வேலைநிறுத்த போராட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கையை மேற்கொள்ள திட்டம் வகுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



இரத்தினபுரி பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# எதிர்க்கட்சி தலைவர் பதவி வழங்கப்பட வேண்டும்; சபாநாயகரை சந்தித்து கோரவுள்ள கூட்டு எதிரணி

கொழும்பு, ஜூலை 17

எதிர்க்கட்சி தலைவர் பதவி தமது அணிக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை விடுக்கும் நோக்கில் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான குழுவினர் இந்த வாரம் சபாநாயகருடன் பேச்சு நடத்தவுள்ளனர்.

இதன்போது தமது அணிக்கு 70 உறுப்பினர்கள் இருக்கின்றனர். எனவே, எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமக்கு வழங்கப்படவேண்டும் என்றும் சபாநாயகரிடம் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் தினேஷ் குணவர்த்தன குறிப்பிடுகையில் –

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி எமக்கு வழங்கப்பட வேண்டும். கூட்டு எதிரணி தனி அணியாகச் செயற்பட்டு வருகின்றது.

தற்போது கூட்டு எதிரணியில் 70 உறுப்பினர்கள் உள்ளனர். ஆனால் 16 பேரைக் கொண்டுள்ள தமிழ்க் கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது. அதனை ஏற்க முடியாது. 70 உறுப்பினர்களைக் கொண்டுள்ள கூட்டு எதிரணிக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்படவேண்டியது அவசியமாகும்.

இந்த நிலையில் இது தொடர்பில் நாங்கள் பல தடவைகள் சபாநாயகரை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளோம். ஆனால் இதுவரை எமக்கு எதிர்க்கட்சி அந்தஸ்து கிடைக்கவில்லை.

இந்த நிலையில் தற்போது கூட்டு எதிரணியில் உள்ள எம்.பி.க்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எனவே இவ்வாரம் சபாநாயகரைச் சந்தித்து எதிர்க்கட்சித் தலைவர் பதவியை எமக்கு வழங்குமாறு நாம் கோரிக்கை விடுக்கவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழ்ப் பாடசாலைகளுக்கு மதிப்பீட்டுக்காக அனுப்பிய சிங்கள மொழி விடைத்தாள்களால் ஆசிரியர்கள் சிரமம்


கொழும்பு, ஜூலை 17

உயர்தர முன்னோடிப் பரீட்சை வினாப்பத்திரங்களுக்கான புள்ளி மதிப்பீடு செயற்வதற்கான விடைத்தாள்களை அனுப்புவதில் மத்திய மாகாண தமிழ்க் கல்வி அதிகாரிகள் தொடர்ந்தும் அலட்சியப் போக்குடன் செயற்பட்டு வருகின்றனர் என பாடசாலை நிர்வாகத்தினர் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பாடசாலை நிர்வாகத்தினர் மேலும் தெரிவிக்கையில் –

மத்திய மாகாண கல்வி திணைக்களம் மாகாணத்திலுள்ள தமிழ், சிங்கள மொழி மூலம் பயிலும் சகல உயர்தர பாடசாலைகளுக்கு மான வினா பத்திரங்களை தயாரித்து விநியோகித்து வருவதுடன் அவற்றுக்கான விடைத் தாள்களையும் வழங்கி வருகின்றது.

இருப்பினும் தற்போது நடைபெறும் 2018 ஆம் ஆண்டுக்கான முன்னோடி பரீட்சை வினாப்பத்திரங்களுக்கான புள்ளி மதிப்பீடு



செய்வதற்கான விடைத்தாள்களை அனுப்புவதில் மத்திய மாகாண தமிழ்க் கல்வி அதிகாரிகள் அலட்சிய போக்குடன் செயற்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக உயர்தரத்தில் தமிழ் மொழி மூலம் கல்வி பயிலும் விஞ்ஞான, இரசாயன, பௌதீகவியல், உயிரியல் மற்றும் தொடர்பாடலும் ஊடக கல்வியும் ஆகிய பாடங்களுக்குமான விடைத் தாள்கள் அனைத்தும் சிங்கள மொழியில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையல் சிங்கள மொழியிலுள்ள விடை தாள்களை தமிழ் மொழிக்கு மொழி பெயர்த்து மாணவர்களின் விடை தாள்களை மதிப்பீடு செய்வதில் தமிழ் பாடசாலையின் ஆசிரியர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே குறித்த பாடங்களுக்கான விடைத் தாள்களை தமிழ் மொழியில் வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதுடன் எதிர்வரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் இடம் பெறாதவாறு அதிகாரிகள் செயற்பட வேண்டும் என்றும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (கு)

## மோட்டார் சைக்கிள் விபத்து: ஒருவர் பலி; மூவர் படுகாயம்

மட்டக்களப்பு, ஜூலை 17


மட்டக்களப்பு – கொழும்பு பிரதான வீதியின் புனானைப் பகுதியில் மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மூவர் படுகாயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் ஏறாவூர், மீராகேணி அஹமட் பரீட் விளையாட்டுக் கழக இளைஞர்கள் ஆறுபேர் கொண்ட குழுவொன்று ஏறாவூர் நோக்கி மூன்று மோட்டார் சைக்கிளில் வேகமாக பயணித்துக் கொண்டிருந்தபோது புனானைப் பகுதியில் வைத்து மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டையிழந்து ஒன்றுடன் ஒன்று மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளொன்றின் பின்னால் அமர்ந்து வந்த ஏறாவூர் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய லாபீர் என்பவரே உயிரிழந்துள்ளார். மேலும் மூவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக மட்டக்களப்பு ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்பு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன், இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## மத்திய மலையகத்தில் கடுமையான பனி!





மத்திய மலையக பகுதியில் தற்பொழுது நிலவும் பனி கால நிலையால் வாகன போக்குவரத்துக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை முதல் ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியில் ஹற்றன் – கொழும்பு பிரதான வீதியில் ஹற்றன் – மஸ்கெலியா பொகவந்தலாவை வீதியிலும் அதனை அடுத்துள்ள வீதிகளிலும் கினிகத்தென்ன – நோர்வூட் வீதிகளிலும் இந்த கடும் பனிமூட்ட காலநிலை காணப்பட்டது.

இந்த வீதிகளில் செல்லும் வாகனங்களில் முன்பக்கத்திலுள்ள முக்கிய மின்குமிழ்களை ஒளிரவிட்டு அவதானத்துடன் வாகனத்தை செலுத்துமாறு ஹற்றன் பொலிஸார் சாரதிகளை அறிவுறுத்தியுள்ளனர்.

இந்த கடும் பனிகாலநிலைக்கு மத்தியில் மலையகப் பிரதேசத்தில் மேற்கு சாரலில் கடும் காற்றும் அடிக்கடி அதிக மழையும் பெய்து வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாகன சாரதிகளுக்கு அறிவுறுத்தல்

கொழும்பு, ஜூலை 17

நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக சில வீதிகளின் தன்மை வழமைக்கு மாறாக காணப்படுவதால் வாகனங்களை சாரதிகள் மிகவும் அவதானமாக செலுத்துமாறு வீதி அதிகார சபை அறிவுறுத்தியுள்ளது.

குறிப்பாக தெற்கு அதிவேக வீதியூடாக பயணிக்கும் வாகனங்களின் சாரதிகள் மிகுந்த அவதானத்துடனும் 60 கிலோமீற்றருக்கு குறைவான வேகத்தில் பயணிக்குமாறும் வீதி அதிகார சபை மேலும் அறிவுறுத்தியுள்ளது.

### கட்டுநாயக்கவில் சீரற்ற காலநிலை:

## இரண்டு விமானங்கள் மத்தளவுக்கு திருப்பியனுப்பி வைக்கப்பட்டுள்ளன

கொழும்பு, ஜூலை 17

சீரற்ற காலநிலை காரணமாக மும்பாய் மற்றும் டுபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்த இரு பயணிகள் விமானங்கள் மத்தள விமான நிலையத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

மும்பாயிலிருந்துவந்த யூ.எல் 142 விமானம் நேற்றுக் காலை 5.52 மணியளவிலும், டுபாயிலிருந்து வந்த யூ.எல் விமானம் 5.48 மணியளவிலும் மத்தள விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டுள்ளன என மத்தள விமான நிலை கடமை நேர பொறுப்பதிகாரி தெரிவித்தார். (கு)

### கொக்குவில் ச.ச. நிலையத்தில்

## ஆடிப்பிறப்பு தமிழர் பண்பாட்டு விழா

கொக்குவில், ஜூலை 17

ஆடிப்பிறப்பு தினமான இன்று செவ்வாய்க்கிழமை கொக்குவில் சனசமூக நிலையத்தின் (பிரம்படி) ஏற்பாட்டில் ஆடிப்பிறப்பு தமிழர் பண்பாட்டு விழா மாலை 5 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

கொக்குவில் பிரதேசத்தில் முதன்முறையாக கொக்குவில் சனசமூக நிலையத்தினால் நடத்தப்படுகின்ற சிறப்புமிகு விழாவில் மங்கல விளக்கேற்றுதல், இறை வணக்கம் செலுத்துதல், வரவேற்புரை கொக்குவில் சனசமூக நிலைய மகிழ் முன்பள்ளி சிறார்களினது ஆடிப் பிறப்பு பாடல் இசைத்தல், அதிதிகளின் சிறப்புரைகள் என்பன நடைபெற்று ஆடிக் கூழ் வழங்குதலும் இடம்பெறும்.

ஆடிப்பிறப்பு தினத்தையொட்டி கொக்குவில் சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்ட பிரம்படி பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கான 'அறிவுத்திறன்காண்' எழுத்துப்பரீட்சைப் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் வைபவமும் இடம்பெறும். அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சனசமூக நிலைய நிர்வாகிகள் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ)

## ரயிலில் வர்த்தகம், யாசகத்தில் ஈடுபட்ட 15 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 17

ரயில்களில் அனுமதியின்றி வர்த்தகத்தில் ஈடுபட்டமை மற்றும் யாசகம் கோரியமைக்காக 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு மற்றும் கம்பஹா போன்ற பிரதேசங்களில் ஒரு வார காலமாக முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பயணிகளுக்கு அசௌகரியம் ஏற்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்



என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு – கோட்டை மற்றும் மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றங்களில் சந்தேகநபர்கள் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

ரயில்களில் வர்த்தகத்தில் ஈடுபடல், யாசகம் கேட்டல் போன்ற செயற்பாடுகள், கடந்த முதலாம் திகதி முதல் தடை செய்யப்பட்டுள்ள நிலையிலேயே இக்குற்றங்களைப் புரிந்தமைக்காக இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பிலான சகல முறைப்பாடுகளையும் 011 23 36 614 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக முன்வைக்க முடியும் என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir



# பிரான்ஸ் சம்பியன்

## 10 சுவாரஸ்ய தகவல்

உலககோப்பை கால்பந்து இறுதிப்போட்டியில் பிரான்ஸ் அணி குரேஷியாவை 4:2 என்ற கணக்கில் வீழ்த்தி கிண்ணத்தை கைப்பற்றியது. நேற்று முன்தினம் இரவு 8.30 மணிக்கு ஆ ட்டம் துவங்கியது. மொஸ்கோவின் லுஜ்நிகி விளையாட்டரங்கில் நடந்த இப்போட்டியில் ஆரம்பம் முதலே குரோஷியா ஆக்ரோஷமாக விளையாடியது.


ஆன்டோனி கிரீஜ்மன்

உலகக் கிண்ண இறுதிப்போட்டி குறித்த சுவாரஸ்யமான 10 தகவல்கள் வருமாறு:-



1. ஓர் அணியில் ஆட்ட வீரராகவும், ஓர் அணிக்கு மனேஜராகவும் உலகக் கிண்ணத்தை வென்ற மூன்றாவது நபரானார் டெஸ்சாம்ப்ஸ். இதற்கு முன்னதாக பிரேசிலின் மரியோ ஜகல்லோ மற்றும் ஜேர்மனியின் பிரான்ஸ் பெக்குன்பெர் இந்தச் சிறப்பை பெற்றிருந்தனர்.

2. நாற்பத்தெட்டு வருடத்திற்கு பிறகு இறுதிப்போட்டியில் நான்கு கோல் அடித்த அணி பிரான்ஸ். 1970இல் பிரேசில் இத்தாலியை 4:1 என வென்றிருந்தது.



3. உலகக் கிண்ண இறுதியாட்டத்தில் முதல் முறையாக விளையாடும் ஓர் அணி தோல்வியடைவது 1974க்கு பிறகு இதுதான் முதல் முறை. குரோஷியாவுக்கு இது முதல் உலகக் கிண்ண இறுதிப்போட்டி.

4. உலகக் கிண்ண இறுதிப்போட்டி வரலாற்றில் தனது அணிக்கு எதிராக கோல் அடித்த ஒரே வீரர் ஆனார் குரோஷியாவின் மண்ட்ஜுகிக்.

5. உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் கோல் அடித்த இரண்டாவது இளையவர் ஆனார் பிரான்ஸின் மாப்பே. அவருக்கு வயது 19 வருடம் 207 நாள்கள். இறுதிப்போட்டியில் இளம் வயதிலேயே கோல் அடித்த பெருமை பிரேசிலின் பீலேவுக்குச் சேரும். அவர் 1958இல் 17 வருடம் 249 நாள்கள் வயது இருக்கும் போதே கோல் அடித்தார்.

6. உலகக் கிண்ண மற்றும் யூரோ கிண்ணம் ஆகியவற்றில் பிரான்ஸ் அணிக்காக இதுவரை 10 கோல்கள் அடித்திருக்கிறார் கிரீஜ்மன். உலகக் கிண்ணம் மற்றும் யூரோ கிண்ணம் ஆகியவற்றில் பத்து நொக் அவுட் போட்டிகளில் 12 கோல்களை தானாக அடிக்கவோ அல்லது இன்னொரு வீரர் அடிக்கவோ உதவியுள்ளார் ஆன்டோனி கிரீஜ்மன். கடந்த ஐம்பது ஆண்டுகளில் பிரான்ஸ் வீரர் ஒருவர் நொக்அவுட் போட்டிகளில் செய்த மிகப்பெரிய சாதனை இது. முன்னதாக ஜினடின் ஜிடேன் எட்டு கோல்களை அடித்ததே பிரான்ஸ் வீரர் ஒருவரின் சாதனையாக இருந்தது.

7. பெரிய கால்பந்து தொடர்களில் 11 கோல்களுக்கு நேரடி காரணமாக இருந்திருக்கிறார் பெரிசிச். வேறு எந்த குரேஷிய வீரரும் இச்சாதனையை செய்யவில்லை.

8. உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் 1982இற்கு பிறகு பெனால்டி பகுதிக்கு பிறகு அதாவது அவுட்சைட் தி பாக்ஸ் பகுதியில் இருந்து கோல் அடித்த வீரர் ஆனார் பிரான்ஸின் போக்பா. 1982இல் இத்தாலி ஷாவி ஜேர்மனி போட்டியில் மார்கோடர்டெல்லி இம்முறையில் கோல் அடித்திருந்தார்.



9. உலகக் கிண்ண வரலாற்றிலேயே ஒரே போட்டியில் தனது அணிக்காக ஒரு கோலும் தனது அணிக்கு எதிராக ஒரு கோலும் அடித்த இரண்டாவது வீரர் ஆகியுள்ளார் குரோஷியாவின் மண்ட்ஜுகிச். 1978இல் இத்தாலிக்கு எதிரான போட்டியில் நெதர்லாந்தின் எர்னி பிராண்ட்ஸ் இதே போல விளையாடியுள்ளார்.

10. கடந்த 20 ஆண்டுகளில் நடந்த ஆறு உலகக் கிண்ண போட்டிகளில் (1998, 2006,2018) மூன்றில் இறுதிப் போட்டிக்கு வந்த ஒரே நாடு பிரான்ஸ். இதில் இரண்டு முறை (1998, 2018) சம்பியன் பட்டம் வென்றுள்ளது பிரான்ஸ்.

## வலி.கிழக்கு பிரதேச சபையின் செயற்றிட்டம்:

# போதைப் பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு

### அச்சுவேலியில் பேரணி, பிரசார கூட்டங்கள்







வலி கிழக்கு, ஜுலை 17

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் போதை பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு செயற்றிடங் கள்; பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை அச்சுவேலியில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கடந்த பிரதேச சபைக் கூட்டத்தில் எமது மண் ணில் இருந்து போதையை ஒழிப்பதற்கான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றி பிரஸ்தபிக்கப்பட்டது. இதன் அடிப்படையில், முதலில் வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தின் முக்கிய நகரங்களுள் ஒன்றான அச்சுவேலியை மையப்படுத்தியும் அதனைத் தொடர்ந்து காலப்போக்கில் ஏனைய கிராமங்கள் தோறும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுக்கப்படவும் தீர்மானிக்கப்பட்டது.

இதனடிப்படையிலேயே நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை அச்சுவேலி பஸ் நிலையத்திற்கு முன்பாக போதைப்பொருளுக்கு எதிரான செயற்றிட்டங்கள் ஆரம்பமாகின.

அச்சுவேலிநகரில் சிலமணிநேரங்கள் விழிப்புணர்வு பதாகைகளுடன் கூடிய பிரதேச சபையின் ஊர்திகள் போதைக்கெதிரான விழிப்புணர்வு வாசகங்களை ஒலிபெருக்கி ஊடாக அறிவிப்புச் செய்தவாறு நகர் வலம் வந்தன.

அதனைத் தொடர்ந்து வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர், உப தவிசாளர், உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலதரப்பட்டவர்களும் போதைக்கு எதிரான சுலோகங்களுடன் நின்று போதைப்பொருள் பாவனை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அணிவகுப்புச் செய்தனர்.

பின்னர் அச்சுவேலி நகரின் வீதிகள் வழியாக பேரணியாகச் சென்ற விழிப்புணர்வாளர்கள் பொது இடங்கள், தனியார் கல்வி நிலையங்கள், சந்தை என மக்கள் கூடும் இடங்கள் தோறும் சிறு சிறு பிரசாரக் கூட்டங்களை நடத்தியதுடன் துண்டுப்பிரசுரங்களையும் விநியோகித்தனர்.

இந் நிகழ்வுகளில் அச்சுவேலி பொலிஸாரும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

(இ

## கதிர்காமத்தில் பெரும் திரளான பக்தர்கள்!



வரலாற்று சிறப்பு மிக்க கதிர்காம கந்தன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டுள்ளனர்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் எசல வீதியுலா நான்காவது நாள் இன்றாகும். இன்று இரவு 7 மணிக்கு வீதியுலா நடைபெறும். நேற்றுமுன்தினம் வரை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து பத்தாயிரத்திற்கும் அதிகமான பக்தர்கள் கதிர்காமம் புனித பூமிக்குச் சென்றுள்ளனர்.

பக்தர்களுக்கான ஏற்பாடுகள் குறித்து கதிர்காம கந்தன் ஆலயத்தின் பதில் பஸ்நாயக்கநிலமே தில்றுவான் ராஜபக்ஷ தெரிவிக்கையில் –

நான்கு அன்னதான சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. பக்தர்களின் வசதிக்காக ஆலய மூலஸ்தானமும், பரிவார மூர்த்திகளும் 24 மணி நேரமும் திறந்திருக்கும் என்று கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் பதில் பஸ்நாயக்கநிலமே தில்றுவான் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

**இன்று ஆடி மாதத்தின் முதல் நாள். தமிழர் பண்டிகையான ஆடிப் பிறப்பையொட்டி இந்த ஆக்கம் வெளியிடப்படுகின்றது.**







## சிறுவர் முதல் பெரியவர் வரை

# கூடிக் கொண்டாடி மகிழும் ஆடிப்பிறப்பு பண்பாட்டு விழா

ஆடிப்பிறப்பு என்ற பண்டிகை தமிழ் சமூகத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்த பண்டிகையாகும். குறிப்பாக ஈழத் தமிழர்கள் இந்தப் பண்டிகையை தமது கலாசார, பண்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாக கொண்டாடி வந்துள்ளார்கள். அன்றைய நாளில் ஆடிக்கூழும், கொழுக்கட்டையும்தான் சிறப்பு உணவுகள். இந்த உணவுகள்தான் ஆடிப்பிறப்பு பண்டிகை கொண்டாட்டத்தின் அடையாளங்கள். இந்த உணவுகள் ஈழத் தமிழ் மக்களின் பண்பாட்டு உணவுகள். இம்முறையும் ஆடிப்பிறப்பை ஒட்டி ஈழத்தில் பல வீடுக ளில் கூழ்காய்ச்சி, கொழுக்கட்டை அவித்து கொண்டாடினாலும் இதையெல்லாம் கொண்டாட முடியாத நிலையிலும் பல வீடுகள்வெளித்துக் கிடக்கின்றன என்பதே சோகமானது.

சூரியன் வடதிசை நோக்கிச் செல்லும் தை தொடக்கம் ஆனி வரையுள்ள ஆறு மாத காலம் உத்தராயண காலம் எனப்படும். இது தேவர்களுக்கு ஒரு



நாளின் பகல் பொழுதாகும். பின்னர், சூரியன் தெற்கு நோக்கிச் செல்லும் காலம் ஆடி முதல் மார்கழி வரையுள்ள ஆறு மாத காலம் தட்சணாயண காலம். இது தேவர் களுக்கு இராப்பொழுதாகும். தட்சணாயணத்தின் ஆரம்ப தினம் ஆடிமாத முதலாம் நாள் ஆகும். இக்காலம் கோடை கால வெப்பம் தணிந்து குளிர்மை படிப்படியாகப் பெருகும் இயல்புடையது. வானியல், அறிவியல் பின்புலத்தை கொண்ட இந்தப் பண்டிகை இயற்கைசார்ந்த வழிபாடாகவும் பரிமாணம் பெறுகிறது.

தமிழகத்தில், இந் நாளில் விருந்



தாக உண்டு மகிழ்தல், விசேட வழிபாடு செய்தலும் உற்றார், உறவினர்களுக்கு இவ்வுண்டி வகைகளை வழங்கி நல்லுறவைப் பேணலும் வழக்கமாக கடைப்பிடிக்கப்படுகிறது. ஆடி மாதத்தில் ஆற்றுநீர் வளமுள்ள தென்னாட்டு மக்கள் காவிரி போன்ற ஆற்றங்கரைகளில் சித்திரான்னம் உண்டு படகோட்டம் போன்ற கேளிக்கைகளில் பங்குபற்றும் இந்த நாளை 'ஆடிப்பெருக்கு' என்றும் ஆடி 18 என்றும் அழைத்து பண்டிகையாகக் கொண்டாடுவர்கள். தற்காலத்திலும் தமிழகத் தலைநகர் சென்னையில் ஆடிப்பெருக்கு கொண்டாடும் வழக்கம் இருக்கிறது.

ஆடி விதை தேடி விதை
ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும்
ஆடி ஆவணி ஆன புரட்டாதி
காடிதோய்த்த கனபனங்காயத்தைத்
தேடித் தேடித் தினமும் புசிப்பவர்
ஓடியோடி யுலகெலாம் பீச்சுவர்

இப்படி தமிழக பழைய பாடல்களில் எழுதப்பட்டுள்ளமை தமிழகத்தில் ஆடிப் பிறப்பிற்குள்ள முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றது.

ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை– என்ற பாடல்தான் ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் ஆடிப்பிறப்பு நாளில் நினைவுக்கு வரும். இந்தப் பாடலை ஈழப் புலவர்களில் ஒருவரான நவாலியூர் சோமசுந்தரப் புலவர் பாடியுள்ளார். ஆடிப் பிறப்புக்கு ஒரு காலத்தில் விடுமுறைகள் விடுக்கப்பட்டுள்ளன. அந்தளவு முக்கியமான நாளாக ஆடிப்பிறப்பு அமைந்துள்ளது. அதாவது தை முதல் நாளையும் ஆடி முதல் நாளையும் ஈழத்தவர்கள் கொண்டாடுகின்றனர். ஓர் ஆண்டின் தொடக்கத்தையும் அரை ஆண்டின் தொடக்கத்தையும் கொண்டாடுகின்றனர். இங்கு முதல் அரையாண்டு தேவர்களுக்குரியதென்றும் இறுதி அரையாண்டு பிதிர்களுக்கு உரியது என்றும் ஒரு

## இனிக்கும் கூழும் கொழுக்கட்டையும்

ஐதீகம் இருக்கிறது.

ஆடிப்பிறப்பன்று, வாணவேடிக்கைகள், களியாட்ட நிகழ்வுகள், பட்டம் விடுதல் முதலிய நிகழ்வுகளில் ஈழத்தவர்கள் ஈடுபட்டிருந்தனர் என மூதாதையர்களின் நினைவுக்குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு சொல்லப்படுகிறது. சிறுவர்களும் முதியவர்களும் இணைந்து கூடிக் கொண்டாடி மகிழும் ஒரு நிகழ்வாக ஆடிப்பிறப்பு காணப்படுகிறது. நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை என்ற பாடல் ஆடிப்பிறப்பின் கொண்டாட்டம், களியாட்டம், பண்பாட்டு முக்கியத்துவம், கலாசார செழிப்பு என்று பல்வேறு முக்கிய அம்சங்களை வெளிப்படுத்துகிறது.

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தம் தோழர்களே!
கூடிப்பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!
பாசிப்பயறு வறுத்துக்குத்திச் செந்நெல்
பச்சை அரிசி இடித்துத் தெள்ளி,
வாசப்பருப்பை அவித்துக் கொண்டு நல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து,
வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே
வேலூரில் சக்கரையுங்கலந்து,
தோண்டியில் நீர்விட்டு மாவை அதிற்கொட்டி
சுற்றிக் குழைத்துத் திரட்டிக் கொண்டு.
வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித்தட்டி
வெல்லக் கலவையை உள்ளே
இட்டு பல்லுக் கொழுக்கட்டை
அம்மா அவிப்பாளே
பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே!
பூவைத் துருவிப் பிழிந்து பனங் கட்டி
போட்டு மாவுண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத்
துழாவுவாள்
மணக்க மணக்க வாயூறிடுமே
குங்குமப் பொட்டிட்டு பூமாஇலை சூடியே
குத்து விளக்குக் கொளுத்தி வைத்து
அங்கிளநீர் பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப் பாடிப்பும் படைப்போமே
வண்ணப் பலாவிலை ஓடிப் பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக் கொண்டு
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளி வார்க்க
ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே
வாழைப் பழத்தை உரித்துத்தின் போம்
நல்ல மாவின் மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்
கூழைச் சுடச் சுட ஊதிக்குடித்துக்
கொழுக்கட்டை தன்னைக் கடிப் போமே
ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தந் தோழர்களே
கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக் கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!
**- நவாலியூர் சோமசுந்தரப்புலவர்**

**ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை– என்ற பாடல் தான் ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் ஆடிப்பிறப்பு நாளில் நினைவுக்கு வரும். இந்தப் பாடலை ஈழப் புலவர்களில் ஒருவரான நவாலியூர் சோமசுந்தரப் புலவர் பாடியுள்ளார். ஆடிப் பிறப்புக்கு ஒரு காலத்தில் விடுமுறைகள் விடுக்கப்பட்டுள்ளன. அந்தளவு முக்கி யமான நாளாக ஆடிப்பிறப்பு அமைந்துள்ளது.**

இப்போது ஆடிப்பிறப்புக்கு விடுமுறை இல்லை. ஆடிப்பிறப்பு என்று மாத்திரம் வெறுமனே எமது நாள்காட்டிகள் நினைவுபடுத்துகின்றன. இப்போது விடுமுறையற்ற ஆடிப்பிறப்பு மாத்திரம் வருவதில்லை. விடுதலையற்ற ஆடிப் பிறப்புத்தான் வருகிறது. விடுதலை பெறாத இனத்தின் எல்லாப் பண்டிகைகளும் கொண்டாடும் தன்மையை இழக்கின்றன. அத்துடன் கூடியிருந்தவர்களை இழந்து, கூடியிருந்தவர்களுக்காக



காத்திருக்கும் துயரச் சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ள ஈழத்தில் இந்த ஆடிப்பிறப்பு வேதனையை தோற்றுவிக்கும் நாளாகவும் ஆகிவிட்டது.

ஆடிப்பிறப்புக்கு விடுமுறை வழங்கப்பட்ட செயற்பாடு ஏன் வழக்கொழிந்தது? தற்போது ஆடிப்பிறப்பின் போது கொண்டாட்ட நிகழ்வுகளை பாடசாலைகளிலும், பொதுஇடங்களிலும் வடமாகாண பண்பாட்டு திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது. எனினும் ஆடிப்பிறப்பு போன்ற பண்பாட்டு முக்கியத்துவம் மிக்க தினங்களை விடுமுறை தினங்களாக்க வேண்டும். வடகிழக்கில் இந்த நடைமுறையைக் கொண்டுவருவதன் மூலம் காயப்பட்ட ஈழ மக்கள், தமது பாரம்பரிய பண்பாட்டு தினங்களை கொண்டாடி உளத்தை மகிழ்ச்சிக்கு உள்ளாக்க முடியும்.

பண்டிகை நாள்களில் மனதில் பெரும் மகிழ்ச்சியோடு, உறவுகள் கூடியிருப்பதுதான் மகிழ்ச்சியையும் கொண்டாட்டதையும் புது தொடக்கத்தையும் தருகிறது. பண்பாட்டு அழிப்புக்களுக்கும் கலாசார நெருக்கடிகளுக்குள்ளும் தள்ளப்பட்டுள்ள ஈழத் தமிழ் இனம் ஆடிப்பிறப்பு போன்ற பாரம்பரிய பண்டிகை தினங்களை தொடர்ந்து கொண்டாடி தமது கலாசார, பண்பாட்டுதடத்தை வலுப்படுத்த வேண்டும். அதேநேரம், விடுதலையற்ற சனங்களாக, பண்பாட்டு – கலாசார அழிவுப் பொறிகள் சூழப்பட்ட சனங்களாக வாழும் ஈழத் தமிழர்கள் ஆடிப்பிறப்புக்களை அழுத்தம் நிறைந்த மனதோடுதான் கடந்து செல்கிறார்கள் என்பதையும் இந்த நாளில் எடுத்துரைக்க வேண்டும்.

★




# கல்விக் கதிர் வெளியீடு 06

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்

## பகுதி – I

**கூற்றை நன்கு விளங்கிக்கொண்டு சரியான விடையைத் தெரிவு செய்க.**

21. வடக்கு நோக்கிச் சென்று இரண்டு முறை வலது பக்கம் திரும்பும் ஒருவர் எத்திசையில் நிற்பார்?
(1) கிழக்கு (2) மேற்கு (3) தெற்கு

22. வடக்கு நோக்கி நிற்கும் ஒருவர் மூன்று முறை இடது பக்கம் திரும்பி பின் இரண்டு தடவை வலது பக்கம் திரும்பினால் அவர் எத்திசை நோக்கி நிற்பார்?
(1) கிழக்கு (2) மேற்கு (3) தெற்கு

23. பண்ணை ஒன்றில் 20 பசுக்களும் 30 எருமைகளும் 25 குதிரைகளும் உள்ளன. அவற்றின் கொம்புகளின் மொத்த எண்ணிக்கை யாது?
1. 150 2.125 3. 100

24. குயில்கள் அழகான கூட்டினை கட்டின என்ற கூற்று பொய்யாவதற்கான காரணம்
1. குயில்கள் கூடு கட்டுவதில்லை
2. குயில்கள் கூடுகளை விரும்புவதில்லை
3. குயில்கள் கூடு கட்டும் பிராணிகள் ஆகும்.

25. நாங்கள் தோட்டத்தில் பூக்கள் பறித்தோம், இதில் உள்ள பறித்தோம் என்பது
1. உயர்திணை, ஒருமை
2. உயர்திணை, பன்மை
3. அஃறிணை, பன்மை

26. பால்,குடம் என்பதை சேர்த்தெழுதினால்
1. பால்க்குடம் 2. பாற்க்குடம் 3. பாற்குடம்

27. கோலத்தில் வெற்றுக் கூட்டில் வரவேண்டிய விடையின் கீழ்க் கோடிடுக.

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | 22 | 32 | 42 | |

1. 72 2. 52 3. 62

28.

| | | | | |
|---|---|---|---|---|
| 81 | 64 | 49 | 36 | .... |

1. 25 2. 16 3. 9

29. யுஇன் தந்தை ட இன் மகனெனின் யு ஆனவர் ட இதற்கு என்ன உறவு முறை.
1. மகன் 2. பாட்டன் 3. பேரன்

30. மரங்களைச் செதுக்கப் பயன்படுத்த மிக உகந்த உபகரணம்
1. துறப்பணம் 2. உளி 3. சீவுளி

31. பாபு வாங்கிய குடை ஒன்றில் என்ற விலை காட்டப்பட்டுள்ளது. எனின் அதன் விலையாக இருக்க கூடியது
1. 74 2. 949 3. 363

32. குப்பையிலேபோட்டாலும் குன்றி மணி மங்காது என்ற பழமொழியின் கருத்து
1. நற்புகழ் என்றும் மங்காது
2. கோபம் சிந்தனைனக்கு இடையுறு
3. எது செய்தாலும் ஆராய்ந்தே செய்யவேண்டும்


33. எல்லை மீறினால் ஆபத்து என்ற கருத்தைத் தரும் பழமொழி
1. ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு
2. அடாது செய்பவர் படாது படுவர்
3. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு

34. மோனாலிசா ஓவியம் காணப்படும் இடம்
1. சிகிரியா 2. தாஜ்மகால் 3. பாரிஸ்

35. இணையம் பயன்படுத்த கணினியுடன் இணைக்க வேண்டியது
1. மின்னமுத்தி
2. சைக்கிள் ஒன்றின் பற்சில்லுகள்
3.தொலைபேசி வலையமைப்பு


36. 'மாலா பூ பறித்தாள்' இதில் உள்ள பயனிலை
1. மாலா 2. பூ 3.பறித்தாள்

37.




சிறிய பேணியில் இருந்து எத்தனைதடவைகள் ஊற்றினால் பொய பேணியில் அரைவாசி நிரம்பும்
1. 12 தடவைகள் 2. 15 தடவைகள் 3. 20 தடவைகள்

38. தரப்பட்டுள்ள கவிதையின் நான்கு வரிகளின் ஒழுங்குமுறை யாது?
1. A – ஆசான் சொல் கேட்டுநாம்
2. B – உயர்ந்துநாமும் சிறந்திட
3. C – அன்பாய் பண்பாய் பயிலுவோம்
4. D – வளமும் அறிவும் பண்பட
1.DCAB 2.DBAC 3.BCDA




## மீன் பிடித்த முல்லா

முல்லா வசித்த ஊரில் நெடு நாள்களாக நீதிபதி யாரையும் மன்னர் நியமிக்கவில்லை. மக்கள் இது குறித்து மன்னரிடம் முறையிட்டனர்.

தற்பெருமை சற்றும் இல்லாத அடக்கமான ஒருவரை உங்கள் ஊரில் நீதிபதியாக நியமிக்க எண்ணியிருக்கிறேன். இதுவரை அத்தகைய தகுதி படைத்தவர் என் கண்களில் பட வில்லை . அதனால்தான் உங்கள் ஊரில் நீதிபதியாக யாரையும் நியமிக்க வில்லை என்றார் மன்னர்.

இந்தச் செய்தியை முல்லா அறிந்தார்.

ஒரு நாள் காலையில் முல்லா ஒரு பழைய மீன் பிடிக்கும் வலையை உடலில் போர்த்தியவாறு அரண்மனைப் பக்கமாக நடமாடிக் கொண்டிருந்தார்.

அரண்மனை உப்பரிகையில் உலாவிக் கொண்டிருந்த மன்னர் முல்லா மீன் வலையை போர்த்திக் கொண்டு உலாவுவது கண்டு ஆச்சரியமடைந்தார். தனது பணியாளன் ஒருவனை அனுப்பி முல்லாவை அழைத்து வரச்சொன்னார்.

முல்லா நீர் ஏன் இப்படி மீன் வலையைப் போர்த்திக் கொண்டு உலாவுகிறீர்? என்று வினவினார்.

மன்னர் அவர்களே, நான் ஆதி நாளில் மீன்பிடிக்கும் தொழிலைத்தான் செய்து கொண்டிருந்தேன். நான் என்னதான் முல்லா ஆகிவிட்டாலும் பழைய தொழிலை மறக்கலாமா? எந்தத் தொழிலையும் கேவலமாகச் கருதக் கூடாது என்பதற்காக மறுபடியும் மீன் பிடிக்கப் போகிறேன் என்றார் முல்லா.

இத்தனைக் காலமாகத் தாம் எதிர்பார்த்த அடக்கமான மனிதர் முல்லாதான் என்று மன்னருக்குத் தோன்றியது.

அதனால் அவரையே மன்னர் நீதிபதியாக நியமித்தார்.

சில நாள்கள் சென்ற பிறகு தெரு வழியாகச் சென்று கொண்டிருந்த முல்லாவை அரண்மனை உப்பரிகையிலிருந்து மன்னர் கண்டார். அவரிடம் மீன் வலை இல்லாததை அவர் கவனித்தார்.

என்ன முல்லா மீன் வலையைக் காணோம் என்று மன்னர் கேட்டார்.

மன்னர் பெருமானே, மீனைப் பிடித்து விட்ட பிறகு வலை எதற்கு என்றார் முல்லா. முல்லா மீன் என்று குறிப்பிட்டது நீதிபதி பதவியை. மன்னர் அதைப் புரிந்து கொள்ளவில்லை.

## நிறம் தீட்டுங்கள்



காலைக்கதிர் Kalaikkathir



# மக்கள் பணி என்பது பெயர், புகழுக்கான ஒன்றல்ல; ஈ.பி.டி.பியின் உதவி நிர்வாக செயலாளர் தெரிவிப்பு

எமது மக்கள் கடந்தகாலத்தில் அனுபவித்த துயரம் நிறைந்த வாழ்க்கை நிலை இனியும் தொடராதிருக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. அந்தவகையில் மக்களின் எதிர்காலம் சிறப்பானதாக அமையவேண்டும் என்பதை முன்னிறுத்தியே நாம் தொடர்ந்தும் அக்கறையுடன் உழைத்து வருகின்றோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட உதவி நிர்வாக செயலாளரும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை உறுப்பினருமான சிவகுரு பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

பல்லசுட்டி காந்திஜீ கலையரங்கம் திறப்பு விழா, காந்திஜீ விளையாட்டு மைதானம் திறப்பு விழா நிகழ்வில் கௌரவ விருந்தினராக கலந்துகொண்டு கட்டடத்தைதிறந்துவைத்த பின்னர் நிகழ்வுக்கு வருகை தந்திருந்த மக்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

எமது கட்சி என்றுமே சுயநலம் கருதியதாக எந்தவொரு செயற்பாட்டையும் செய்தது கிடையாது. மக்களுக்கு எது தேவைப்படுகின்றதோ அதை உடனுக்குடன் பெற்றுக்கொடுக்கவேண்டும் என்பதே எமது செயற்பாடாக உள்ளது.

கடந்தகாலங்களில் எமது கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தனக்கு கிடைத்த வாய்ப்புக்களையும் சந்தர்ப்பங்களையும் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காகவும் அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்காகவும் மிகச் சிறந்த முறையில் பயன்படுத்தி சாதித்துக் காட்டியுள்ளார்.

வடபகுதியை பொறுத்தளவில் எமது கட்சியின் செயலாளர் நாயகத்தின் கரங்கள் பட்டு அபிவிருத்தி கண்ட பிரதேசங்களே அனைத்தும். ஆனால் அவற்றையெல்லாம் நாம் பெயருக்காகவும் புகழுக்காகவும் ஒருபோதும் பயன்படுத்தியது கிடையாது.

எமது மக்களின் அடிப்படை தேவைகளை பெற்றுக்கொள்ளக்கூடியதான அதிகாரங்களைக் கொண்ட உள்ளூராட்சி மன்றங்கள் தற்போது இயங்கு நிலையில் உள்ளன. இவற்றின் ஆட்சி அதிகாரங்கள் பல கட்சிகளின் கூட்டாக இருக்கின்றபோதிலும் அவர்கள் அனைவரும் இப்பிரதேச மக்களின் பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் மக்கள் சேவைகளை செய்ய முன்வரவேண்டும்.

அவ்வாறான ஒரு சூழ்நிலை உருவாக்கப்படும் போதுதான் எமது பிரதேசங்களின் அபிவிருத்தியையும் மக்களின் வாழ்வாதார முன்னேற்றங்களையும் விரைவாக காண முடியும்.

அந்தவகையில் தொடர்ந்தும் உணர்ச்சிப் பேச்சுக்களுக்கும் உசுப்பேற்றுதல்களுக்கும் இடங்கொடுக்காது உண்மையானதும் நியாயமானதுமான கருத்துக்களுக்குசெவிகொடுத்து எதிர்காலங்களில் மக்களுக்கு பணிசெய்யும் அரசியல் தலைமைகளை நிர்ணயிப்பதே காலத்தின் அவசியமாகின்றது.

எனவே எமது மக்கள் சேவையை மேலும் அதிகளாவில் நாம் முன்னெடுத்துச் செல்வதற்கு மக்களாகிய உங்களது ஆதரவும் எம்மை நோக்கி மேலும் அதிகரித்ததாகஇருக்கவேண்டும். கடந்த காலத்தில் நாம் இப்பிரதேசத்திற்கு பல்வேறுவகையான வாழ்வாதார உதவித்திட்டங்கள், வீட்டுத்திட்டங்கள் உள்ளிட்ட கட்டுமானப்பணிகளையும் பெற்றுக்கொடுத்து மக்களின் வாழ்வியல் நிலையில் மாற்றத்தை உருவாக்கி காட்டியிருக்கின்றோம்.

அந்தவகையில் மக்கள் எமதுகரங்களுக்கு அதிகரித்த அரசியல் பலத்தை தரும் பட்சத்தில் இப்பிரதேசம் நிச்சயமாகஅபிவிருத்தியால்வெற்றிகொள்ளும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தூக்கிலிடவுள்ளோர் பட்டியல்; வெலே சுதா, சூசை நீக்கம்

### சிறைச்சாலைகள் ஆணையாளர் விளக்கம்

கொழும்பு, ஜூலை 17

வெலிக்கட சிறைச்சாலையில் உள்ள போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ள முன்னணி போதைப் பொருள் மன்னர்களான வெலே சுதா மற்றும் தர்மராஜா சுதேஷ்எனும்பெயரையுடைய சூசை ஆகியோர் தூக்குத் தண்டனைக் கைதிகளாக பெயரிடப்பட்டுள்ள 18 பேரின் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர் என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் நிஷாந்த தனசிங்க தெரிவித்துள்ளார்.

இவர்களுக்காக மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதனால் இவர்களைப் பட்டியலில் உட்படுத்தவில்லையெனவும் ஆணையாளர் கூறியுள்ளார்.

சூசை என்பவர் இதற்கு முன்னர் சிறைச்சாலைக்குள் தொலைபேசி அழைப்பின் மூலம் 24 கிலோ போதைப் பொருளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டபோது போதைப் பொருளுடன் இருவர் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த கைது செய்யப்பட்ட இருவரின் வாக்குமூலத்தின்படி சூசைதான் இந்த வியாபாரத்தில் ஈடுபட்டார் என்பதும் அறியவந்துள்ளது.

வெலே சுதாவும் கடந்த காலங்களில் சிறையிலிருந்தே போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் பல விசாரணைகளின் மூலம் வெளியாகியிருந்தன.

இந்த சிறைக் கைதிகள் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள். இருப்பினும், இவர்கள் தமக்கு எதிரான தீர்ப்புக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். இதனால், இவர்கள் இருவரினதும் பெயர்கள் தூக்குத் தண்டனை வழங்கப்படவுள்ள பெயர்ப் பட்டியலில் சேர்க்கப்படவில்லையெனவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

தூக்கில் போடவேண்டியவர்களின் பெயர்ப் பட்டியல் சிறைச்சாலைகள் திணைக்களத்திடமிருந்து நீதி அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

## ஆபத்தான பாம்புகளுடன் கம்பஹா யுவதி!





இலங்கையில் விஷப் பாம்புகளுடன் இளம் யுவதி ஒருவர் செய்யும் செயற்பாடுகள் குறித்து சமூக வலைத்தளங்களில் அதிகம் பேசப்பட்டு வருகின்றன.

கம்பஹாவைச் சேர்ந்த பாக்யா மிஹிரனி, பல வகையான பாம்புகளுடன் நட்பாக பழகி வருகிறார்.

அவர் பாம்புகளுடன் செல்லபிராணி போன்று விளையாடுகிறார் என தெரிவிக்கப்படுகின்றது.

ஆபத்தான அனைத்து பாம்புகளையும் கையில் எடுத்து, உடம்பில் போட்டு விளையாடுவதற்கு அவர் பழக்கம் கொண்டுள்ளார்.

அவருக்கு பாம்புடன் பழக எந்த விதமான பயமும் இல்லை என குறிப்பிட்டுள்ளதுடன், அதனை உறுதி செய்யும் வகையிலான புகைப்படங்கள் இணையத்தில் வெளியாகியுள்ளன.

எனினும் யுவதியின் துணிச்சலான செயற்பாடுகளை பார்த்த மக்கள் பெரும் வியப்பு அடைத்துள்ளனர். பாம்பு என்றால் பயப்படும் மக்களுக்கு மத்தியில் யுவதியின் துணிச்சலான செயற்பாடு குறித்து பலரும் பாராட்டியுள்ளனர்.

## கூரிய ஆயுதத்தால் அதிகாரி கொலை!

கொழும்பு, ஜூலை 17

அங்குருவாதொட்ட, தொடங்கொட பிரதேச செயலகத்தில் பணிபுரியும் அதிகாரியொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலைசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

வேரவத்தை பகுதியிலுள்ள தங்குமிடமொன்றில் வைத்து இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் 39 வயதுடைய நபரே இவ்வாறு கூரிய ஆயுதத்தால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் ஹெரணை தேசிய வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

அங்குருவாதொட்ட பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## காலி மாவட்டத்தில் 'தனசவிய' ஏற்றுமதி பயிர் மேம்பாட்டுத் திட்டம்



ஆரம்பக் கைத்தொழில் அமைச்சின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் 'தனசவிய' திட்டத்தில் காலி மாவட்டத்தில் ஏற்றுமதி பயிர் மேம்பாட்டு வேலைத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகிறது என மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதன் கீழ் கறுவா, மிளகு போன்றவை உற்பத்தி செய்யப்படுவதுடன் அவற்றின் மூலம் வெற்றிகரமான அறுவடை பெறப்பட்டுள்ளது என காலி மாவட்ட செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதில் 700 குடும்பங்கள் செயற்பட்டு வருகின்றன. இதற்காக ஆரம்பக் கைத்தொழில் அமைச்சு 70 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

## கொட்டிக்காவத்தையில் ஆர்ப்பாட்டம்; போக்குவரத்து நேற்று பெரும் பாதிப்பு!

கொழும்பு, ஜூலை 17

கொட்டிக்காவத்தை சந்தியில் இடம்பெற்று வரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாக கொழும்பு – அவிசாவளை வீதியில் போக்குவரத்து நேற்று பாதிப்படைந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

2016 ஆம் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் இதுவரை காலமும் தமக்கு எந்தவிதமான நிவாரணங்களோ உதவிகளோ வழங்கப்படவில்லை என தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

# ஹைதி நாட்டின் பிரதமர் ராஜினாமா

## பெற்றோல், டீசல் விலை உயர்வால் மக்கள் போராட்டம்



போர்ட் ஆ பிரின்ஸ், ஜூலை 17

ஹைதியில் பெற்றோல், டீசல் விலை உயர்வு காரணமாக எழுந்த போராட்டத்தின் விளைவாக பிரதமர் ஜாக், தான் பதவி விலகுகிறேன் என அறிவித்துள்ளார்.

கரீபியன் கடல் தீவு நாடுகளில் ஒன்று, ஹைதி. இந்த நாட்டின் வளர்ச்சிக்காக சீர்திருத்தங்கள் கொண்டு வருவதற்கு கடந்த பெப்ரவரி மாதம், சர்வதேச நிதியத்துடன் (ஐ.எம்.எவ்) ஒரு ஒப்பந்தம் போட்டனர்.

அப்போதுளிபொருளுக்கான மானியத்தை விலக்கிக்கொண்டால்தான், கல்வி, சுகாதாரம், வேலை வாய்ப்பு உருவாக்கல் போன்றவற்றுக்கு நிதி கிடைக்கும் என சர்வதேச நிதியம் கூறியது.

இதையடுத்து எரிபொருள்களுக்கான மானியம் விலக்கப்பட்டது. இதனால் பெற்றோல் விலை 38 சதவீதமும், டீசல் விலை 47 சதவீதமும், மண்ணெய் விலை 51 சதவீதமும் உயர்ந்தன.

இதை எதிர்த்து மக்கள் கடந்த சில நாட்களாக பெருமளவில் திரண்டு அரசுக்கு எதிராக போராட்டங்கள் நடத்திவருகின்றனர். இதில் வெடித்த வன்முறையில் 4 பேர் பலியாகினர். பல கட்டடங்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

இதன் காரணமாக அந்த நாட்டின் பிரதமர் ஜாக் கய் லபோன்டன்ட் மீது, நாடாளு மன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர வேண்டும் என்று குரல்கள் எழுந்தன.

இந்த நிலையில் நாடாளு மன்ற கீழ் சபையில் பிரதமர் ஜாக் பேசினார். அப்போது அவர் தான் பதவி விலகி விட்டேன் என அறிவித்தார். பதவி விலகலை ஜனாதிபதி ஜோவேனெல் மெய்ஸே ஏற்றுக்கொண்டேன் என்று தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தானில் கோர விபத்து;

## 18 பேர் பலி; 30 பேர் காயம்



கராச்சி, ஜூலை 17

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் திருமண நிகழ்ச்சிக்கு சென்று திரும்பியபோது ஏற்பட்ட வீதி விபத்தில் 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தானின் சிந்து மாகாணம் ஐதராபாத்தைச் சேர்ந்த சுமார் 50 பேர் சன்ராந்த் நகரில் நடைபெற்ற திருமண நிகழ்ச்சியில் பங்கேற்றுவிட்டு பஸ்ஸில் சொந்த ஊர் திரும்பினர். நேற்று அதிகாலையில், பஸ்ஸின் டயர் வெடித்ததால், நெடுஞ்சாலையோரம் வாகனத்தை நிறுத்தி டயர் மாற்றிக்கொண்டிருந்தனர்.

அப்போது, அந்த வழியாக வேகமாக வந்த வெறி, நின்றுகொண்டிருந்த பஸ்ஸின் மீது பயங்கரமாக மோதியது. இதில் பஸ் முற்றிலும் சிதைந்துபோனது. விபத்து பற்றி தகவல் அறிந்த பொலிஸார் மற்றும் மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

இந்த கோர விபத்தில், ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 பேர் உள்ளிட்ட 18 பேர் உயிரிழந்தனர். 30 பேர் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு அருகில் உள்ள ஹாலா மற்றும் ஐதராபாத்தில் உள்ள மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் 6 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது என தகவல் வெளியாகி உள்ளது.

### சிறையில் நவாஸ் ஷெரீப்புடன் அவரது குடும்பத்தினர் சந்திப்பு



இஸ்லாமாபாத், ஜூலை 17

அடியலா சிறையில் உள்ள நவாஸ் ஷெரீப், மரியம், கேப்டன் சப்தார் ஆகியோரை அவர்களது குடும்பத்தினர் சந்தித்து பேசியுள்ளனர்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப், ஊழல் செய்து சம்பாதித்த பணத்தில் லண்டனில் 'அவென்பீல்ட்' சொகுசு வீடுகள் வாங்கி குவித்ததாக தொடரப்பட்ட வழக்கில் அவரும், அவரது மகள் மரியமும், மருமகன் கேப்டன் சப்தாரும் தண்டிக்கப்பட்டனர்.

ராவல்பிண்டி அடியலா சிறையில் கேப்டன் சப்தார் ஏற்கனவே அடைக்கப்பட்ட நிலையில், நவாஸ் ஷெரீப்பும், அவரது மகள் மரியமும் 13 ஆம் திகதி இரவு லண்டனில் இருந்து திரும்பிய நிலையில், அந்த சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்களுக்கு சிறையில் 'பி' வகுப்பு வழங்கப்பட்டு உள்ளது.

இந்த நிலையில் நவாஸ் ஷெரீப் தம்பி ஷாபாஸ் ஷெரீப், அவரது தாயார், மரியம் மகள் மெஹருன்னிஷா, ஷாபாஸ் ஷெரீப்பின் மகன் ஹம்சா ஆகியோர் கடந்த சனிக்கிழமை இரவு லாகூரில் இருந்து இஸ்லாமாபாத்துக்கு தனி விமானத்தில் வந்தனர். அங்கிருந்து நேராக ராவல்பிண்டி அடியலா சிறைக்கு சென்றனர்.

அங்கு சிறை அத்தியட்சகர் அறையில் வைத்து நவாஸ் ஷெரீப், மரியம், கேப்டன் சப்தார் ஆகியோரை அவர்கள் சந்தித்து பேசினர். அரசிடம் இருந்து சிறப்பு அனுமதி பெற்று இந்த சந்திப்பு 2 மணி நேரத்துக்கும் மேலாக நடந்ததாக தகவல்கள் கூறுகின்றன.

முன்னதாக லாகூரில் நிருபர்களிடம் ஷாபாஸ் ஷெரீப் பேசுகையில்,

'அவென்பீல்ட் வழக்கில் உயர் நீதிமன்றம் நவாஸ் ஷெரீப் குடும்பத்தினருக்கு நிவாரணம் கிடைக்கும் என நம்பிக்கை தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கன் தலைநகர் காபூலில் தற்கொலை குண்டுத் தாக்கு

## பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட 7 பேர் சிதறிச் சாவு

காபூல், ஜூலை 17

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் அமைந்துள்ள கிராமப்புற மறுவாழ்வு மற்றும் மேம்பாட்டு அமைச்சகத்துக்கு வெளியே நடத்தப்பட்ட மனித வெடி குண்டுத் தாக்குதலில் 7 பேர் உடல்கள் சிதறி பரிதாபமாக உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானில் பயங்கரவாதிகளுக்கும், அரசு படைகளுக்கும் இடையே பல ஆண்டுகளாக போர் நடந்து வருகிறது. சமீபத்தில் ஆப்கானிஸ்தான் பயங்கரவாதிகள் மீது அரசுப்படை நடத்திய தாக்குதலில் ஒரே நாளில் நூற்றுக்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இந்தநிலையில், ஆப்கானிஸ்தானின் தலை நகர் காபூலில் அமைந்துள்ள கிராமப்புற மறு வாழ்வு மற்றும் மேம்பாட்டு அமைச்சகத்துக்கு வெளியே தற்கொலைப் படை தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில் பாதுகாப்பு படை அதிகாரிகள் 3 பேர் கொல்லப்பட்டார்.

இதுதொடர்பாக அதிகாரி ஒருவர் கூறுகையில் –

அமைச்சகத்தில் இருந்து வெளிவரும் அதிகாரிகளை குறிவைத்து இந்த தற்கொலைப்படை தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 13 பேர் படுகாயங்களு டன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்று தெரிவித்துள்ளார்.

மேலும், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளவர்களின் சிலரது நிலை கவலைக்கிடமாக இருக்கின்றமையால், உயிரிழப்புகள் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

# முறைகேடான வழியில் இம்ரான்கானுக்கு 5 குழந்தைகள்: முன்னாள் மனைவி தகவல்

இஸ்லாமாபாத், ஜூலை 17

பாகிஸ்தான் முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான்கானுக்கு முறைகேடான வழியில் 5 குழந்தைகள் உள்ளனர் என அவரது முன்னாள் மனைவி தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான் கான் பாகிஸ்தான் தெக்ரிக் – இ –இன்சாப் என்ற அரசியல் கட்சியை தொடங்கியுள்ளார். தீவிர அரசியலில் ஈடுபட்டுள்ள அவர் இதுவரை 3 திருமணங்கள் செய்துள்ளார்.

அவர்களில் ஜெமீமா, ரேஹம்கான் ஆகிய 2 பெண்களை விவாகரத்து செய்துவிட்டார். சமீபத்தில் புஷ்ரா மனிகா என்பவரை திருமணம் செய்துள்ளார். எதிர்வரும் 25 ஆம் திகதி பாகிஸ்தான் நாடாளுமன்ற தேர்தலில் இம்ரான்கான் கட்சி போட்டியிடுகிறது. அதில் வெற்றி பெற்று அவர் பிரதமராகும் வாய்ப்பு உள்ளது என கருதப்படுகிறது.

இந்த நிலையில், இம்ரான்கானுடன் 10 மாதங்களே வாழ்ந்த அவரது 2 ஆவது மனைவி ரேஹம்கான் சுயசரிதை புத்தகம் வெளியிட்டுள்ளார். அதில் இம்ரான் கான் குறித்து பல்வேறு குற்றச்சாட்டுகளை கூறியுள்ளார்.

அதில், இம்ரான்கானுக்கு தெரிந்ததெல்லாம் செக்ஸ் மற்றும் தவறான உறவு முறைதான். பெண்களை மதிக்க தெரியாதவர். அவர் ஓர் ஓரின சேர்க்கையாளர், குடும்ப வாழ்க்கையின் விதிமுறைகள் புரியாதவர், போதை பழக்கத்துக்கு அடிமையானவர் என குற்றச்சாட்டுகளை அடுக்கியுள்ளார்.

அரசியல் கட்சி தொடங்கிய போது நான் பல ஆலோசனைகளை வழங்கி உதவினேன். இதனால் பல தனிப்பட்ட வழக்குகளை சந்திக்க நேரிட்டது.





அவருக்கு முறைகேடான வழியில் பிறந்த 5 குழந்தைகள் உள்ளன. இதை அவரே ஒப்புக் கொண்டுள்ளார். அவரோடு முறைகேடான உறவு வைத்திருந்த சிலர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் தேர்தல் நெருங்கும் நேரத்தில் வெளியிடப்பட்டுள்ள இந்தப் புத்தகம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. புத்தகத்துக்கு பொது மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பும் கிடைத்துள்ளது.

# கர்நாடக அணைகள் நிரம்பியதால் காவிரியிலிருந்து தமிழகத்துக்கு ஒரு லட்சம் கனஅடி தண்ணீர் திறப்பு



கர்நாடகாவில் காவிரி ஆற்றின் குறுக்கேயுள்ள கிருஷ்ணராஜசாகர், கபினி உள்ளிட்ட அணைகள் நிரம்பியமையால், தமிழகத்துக்கு விநாடிக்கு 1லட்சம் கனஅடி நீர் திறக்கப்பட்டுள்ளது. இதனால் ஒகேனக்கல் உட்பட காவிரி கரையோர பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கர்நாடக மாநிலத்தில் கடந்த இரு மாதங்களாக பெய்துவரும் தென்மேற்கு பருவமழையால் அனைத்து அணைகளுக்கும் நீர்வரத்து அதிகரித்தது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளான மடிகேரி, மைசூரு, மண்டியா, ராம்நகர், பெங்களூர் உள்ளிட்ட மாவட்டங்களிலும் தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

இதனால் ஆற்றின் குறுக்கேயுள்ள ஹாரங்கி, ஹேமாவதி, கிருஷ்ணராஜசாகர் உள்ளிட்ட அணைகளுக்கு நீர்வரத்து பன்மடங்கு அதிகரித்தது. கபினி ஆறு உற்பத்தியாகும் கேரள மாநிலம் வயநாடு மலைப்பகுதிகளில் தொடரும் மழையால் மைசூர் மாவட்டத்தில் உள்ள கபினி அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது.

இதனால் கடந்த மாத இறுதியில், கடல் மட்டத்தில் இருந்து 2,284 அடி உயரத்தில் உள்ள கபினி அணை முழு கொள்ளளவை நெருங்கியது. அதைத் தொடர்ந்து கடல் மட்டத்தில் இருந்து 2,859 அடி உயரத்தில் உள்ள ஹாரங்கி அணையும் முழு கொள்ளளவை தொட்டது. இந்நிலையில் மண்டியா மாவட்டத்தில் 124.80 அடி உயரத்தில் உள்ள கிருஷ்ணராஜசாகர் அணை நேற்றுமுன்தினம் முழு கொள்ளளவை எட்டியது.

இதனால் காவிரி நீர்ப்பாசன கழகம், காவிரியின் குறுக்கேயுள்ள கிருஷ்ணராஜசாகர், கபினி உள்ளிட்ட 4 அணைகளும் முழு கொள்ளளவை எட்டிவிட்டதாக அதிகாரபூர்வமாக அறிவித்தன. இந்நிலையில் கனமழையின் காரணமாக கிருஷ்ணராஜசாகர், கபினி ஆகிய இரு அணைகளுக்கும் தலா 40 ஆயிரம் கன அடிக்கும் அதிகமாக நீர் வந்துகொண்டிருந்தது. இதேபோல ஹாரங்கி, ஹேமாவதி ஆகிய இரு அணைகளுக்கும் விநாடிக்கு 20 ஆயிரம் கனஅடிக்கும் அதிகமாக நீர் வந்தது.

எனவே அணைகளின் பாதுகாப்பு கருதி, நீர்வரத்து அதிகரித்த மதகுகள் மூலம் காவிரி ஆற்றுக்கு திறந்து விடப்பட்டன.

நேற்று மாலை நிலவரப்படி கிருஷ்ணராஜசாகர் அணையில் இருந்து விநாடிக்கு 55 ஆயிரம் கனஅடி மற்றும் கபினி அணையில் இருந்து விநாடிக்கு 45 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்பட்டுள்ளது. இதே போல ஹாரங்கி, ஹேமாவதி ஆகிய அணைகளில் இருந்து சுமார் 20 ஆயிரம் கன அடி நீர் திறக்கப்பட்டுள்ளது. கர்நாடக விவசாயிகளின் பாசனத்துக்குப்போக, தமிழகத்துக்கு விநாடிக்கு 1 லட்சம் கன அடி நீர் காவிரியில் திறக்கப்பட்டுள்ளது

# தமிழகத்தில் ஊழல் தீர்க்க முடியாத நோய்: பொன்.ராதாகிருஷ்ணன் குற்றச்சாட்டு



கடந்த 50 ஆண்டுகளாக தமிழகத்தில் ஊழல் என்பது தீர்க்க முடியாத நோயாக மாறியுள்ளது என மத்திய இணை அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேசியத் தலைவர்களில் ஒருவரான காமராஜர், நாட்டின் ஒற்றுமையை வலியுறுத்தி, ஊழலற்ற, நேர்மையான அரசை வழி நடத்தினார். காமராஜரின் பாதையில் பிரதமர் மோடி பயணித்து வருகிறார்.

காமராஜரின் பிறந்த நாளில் அவரின் தேசியப் பாதையை பின்பற்றி நாட்டின் ஒற்றுமையை பலப்படுத்த அனைவரும் உறுதியேற்க வேண்டும். நீட் தேர்வு குறித்த உயர் நீதிமன்ற மதுரை கிளையின் தீர்ப்பு கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும். நீதிமன்றத்தின் தீர்ப்பை உதாசீனப் படுத்த மாட்டோம்.

தமிழகத்தில் பசுமை வழிச்சாலை திட்டத்தில் விவசாயிகளை கேடயமாக பயன்படுத்தி பயங்கரவாத இயக்கங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றன. தமிழக முன்னேற்றம் என வரும்போது, அனைத்து அரசியல் கட்சியினரும் ஒத்துழைக்க வேண்டும்.

கன்னியாகுமரியில் இருந்து திருவனந்தபுரத்துக்கு நான்கு வழிச்சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. தற்போது, இந்த தூரத்தை கடக்க மூன்றரை மணி நேரம் ஆகிறது.

நான்கு வழிச்சாலை அமைக்கப்பட்டால் பயண தூரம் ஒரு மணி நேரமாக குறையும். ஊழல் பிரச்சினையை பொறுத்தவரை, மக்களுக்கு அரசு பதில் சொல்ல வேண்டும். தமிழகத்தில் ஊழல் இல்லாத அரசு இருக்க வேண்டும். கடந்த 50 ஆண்டுகளாக தமிழகத்தில் ஊழல் என்பது தீர்க்க முடியாத நோயாக மாறியுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

# ஸ்டெர்லைட் ஆலை ஊழியர்களை உடனே பணிக்குத் திரும்ப உத்தரவு

## அதன் நிர்வாகம் அறிவிப்பு



ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட்டு 45 நாள்களுக்கு பின்னர் ஊழியர்களுக்கு ஆலை நிர்வாகம் அவசர அழைப்பு விடுத்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட கோரி கலெக்டர் அலுவலகம் நோக்கி பேரணியாக சென்ற பொதுமக்கள் மீது கடந்த மே மாதம் 22 ஆம் திகதி துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதில் 13 பேர் பலியானார்கள். 100இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். அதைத் தொடர்ந்து ஸ்டெர்லைட் ஆலையை அரசு மூடி 'சீல்' வைத்தது. ஆலையை நிரந்தரமாக மூடவும் அரசு நடவடிக்கை எடுத்தது.

ஆலையில் இருக்கும் அமிலங்கள் அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன. இதனிடையே ஆலை மூடப்பட்டதால் ஏராளமான தொழிலாளர்களின் எதிர்காலம் பாதிக்கப்பட்டு உள்ளது என்றும், எனவே ஸ்டெர்லைட் ஆலையை திறக்கவேண்டும் என்றும் ஊழியர்கள் கோரிக்கை விடுத்தனர். ஆலையை மீண்டும் இயக்க அனுமதி கேட்டு பசுமை தீர்ப்பாயத்தில் ஸ்டெர்லைட் ஆலை நிர்வாகம் மனு கொடுத்துள்ளது.


இந்த நிலையில், ஸ்டெர்லைட் ஆலையில் பணியாற்றிய ஊழியர்களை உடனே பணிக்கு திரும்புமாறு ஆலை நிர்வாகம் உத்தரவிட்டு உள்ளது. ஆலையில் வந்து ஊழியர்கள் தங்கள் வருகையை பதிவு செய்யவும் நிர்வாகத்தினர் அறிவுறுத்தி உள்ளனர். ஆலையில் இருந்து வாகனங்கள் மூலமாக ஊழியர்களை அழைத்துவரவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

அனைத்து ஊழியர்களையும் ஆலை குடியிருப்பு பகுதிக்கு வருமாறு கூறினர். இதையடுத்து ஆலைக்கு பல்வேறு பகுதியில் உள்ள ஊழியர்கள் நேற்றுக் காலை செல்லத் தொடங்கினர். ஆலை வாகனங்கள் மூலமாகவும் ஊழியர்கள் அழைத்து வரப்பட்டார்கள். ஆலை குடியிருப்பு பகுதிக்கு வந்த அவர்களிடம் ஊழியர்களின் வருகை பதிவு செய்யப்பட்டது. தொடர்ந்து ஆலையை மீண்டும் இயக்கச்செய்வதற்கான அடுத்தகட்ட நடவடிக்கை குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. இதையடுத்து மேலும் கலெக்டர் அலுவலகத்துக்கு சென்று ஆலையை திறக்க வலியுறுத்தி மனு கொடுக்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது.

ஆலை மூடப்பட்டு 45 நாள்களுக்கு பின்னர் ஊழியர்களுக்கு ஆலை நிர்வாகம் அவசர அழைப்பு விடுத்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனிடையே ஸ்டெர்லைட் ஆலையை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஒப்பந்ததாரர்கள் நேற்று தூத்துக்குடி கலெக்டர் அலுவலகத்துக்குத் திரண்டு வந்து மனு கொடுத்துள்ளனர்.

# பா.ஜனதா தலைவர்களுக்கு தகுந்த பதிலடி கொடுக்க அ.தி.மு.க. தயார்

## அமைச்சர் ஜெயக்குமார் எச்சரிக்கை



தேவையற்ற குற்றச்சாட்டுகளை நிறுத்திக் கொள்ளாவிட்டால், பா.ஜனதா தலைவர்களுக்கு தக்க பதிலடி கொடுக்க அ.தி.மு.க. தயாராக இருக்கிறது என அமைச்சர் ஜெயக்குமார் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

காமராஜர் பிறந்த தினத்தையொட்டி, சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள காமராஜர் சிலைக்கு அரசு சார்பில் அமைச்சர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

அதைத்தொடர்ந்துஅமைச்சர் ஜெயக்குமார் நிருபர்களிடம் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் –

காமராஜரின்புகழ்நிலைக்க வேண்டும், என்றும் தழைத்தோங்க வேண்டும் என்ற வகையில் அவருக்கு புகழ் மாலை சூட்டும் வகையில் அனைத்து பள்ளிகளிலும் அவரது பிறந்தநாள் விழா அரசு விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

ஜெயலலிதா மரணம் குறித்த முரண்பாடுகள் களையப்பட்டு, நாட்டு மக்களுக்கு உண்மை நிலை தெரிய வேண்டும் என்பதற்காகத் தான் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. ஆணையம் எந்த நோக்கத்துக்காக போடப்பட்டதோ? அந்த நோக்கத்தின் அடிப்படையில் தான் அது சென்றுகொண்டு இருக்கிறது. அதில் இருந்து எந்த மாறுதலும் இல்லை.

அ.தி.மு.க. ஒரு பெரிய இயக்கம். இந்த இயக்கம் மறைந்த முதல் – அமைச்சர்கள்ஜெயலலிதா, எம்.ஜி.ஆர். என்ன கொள்கைகள், லட்சியங்கள் வகுத்து கொடுத்தனரோ! அந்த பாதையில் சென்றுகொண்டு இருக்கிறது. எனவே அப்படி இருக்கின்ற நிலையில், வேண்டும்என்றே அரசியல் உள்நோக்கத்தோடு, இது போன்ற குற்றச்சாட்டுகளை தேவையில்லாமல் சொன்னால், அதற்கு பதிலடி கொடுக்க நாங்களும் தயாராக இருக்கிறோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

# சட்டம் ஒழுங்கைக் காப்பதில் பா.ஜ.க. தோல்வி: கேஜ்ரிவால்!



புதுடில்லியில் சட்டம் ஒழுங்கைக் காப்பதில் பா.ஜ.க. முற்றிலும் தோல்வியடைந்துள்ளது என்று முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவால் நேற்று தெரிவித்தார்.

இதுதொடர்பில் கேஜ்ரிவால் தனது டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு

‘‘புதுடில்லியில் சட்டம் ஒழுங்கு தற்போது மிக மோசமான நிலைக்கு வந்துள்ளது. பா.ஜ.க முற்றிலும் தோல்வியடைந்துள்ளது’’ என்று குறிப்பிட்டுள்ளார்.

புதுடில்லியில் ஆம் ஆத்மி அரசு நிர்வாகம் செய்துவந்தாலும் பொலிஸ் துறையைப் பொறுத்தவரை மத்திய அரசு தன்னிடமே வைத்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை இரு தற்கொலை நிகழ்வுகளுக்குப் பிறகு அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

மேற்கு டெல்லி காவல்நிலையத்தில் ஒரு 17 வயது பெண் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார் என சொல்லப்படுகிறது. இன்னொன்று, விமானப் பணிப்பெண் மாடியிலிருந்து குதித்து தற்கொலை செய்துகொண்டார் எனச் சொல்லப்படும் சம்பவம் நடந்துள்ளது.

## மாகாணசபைவிசேட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலுவையில் உள்ளதால் தான் இந்தவிசேட அமர்வின்விவாதத் தில்பங்கேற்கவில்லை என முத லமைச்சர் கடிதம் மூலம் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானத்துக்கு அறி வித்துள்ளார்.

இதேவேளை, வடக்கு மாகாண சபையின் ஏனைய அமைச்சர் களும் நேற்றைய விசேட அமர் வில் கலந்துகொள்ளவில்லை.

மாகாண அமைச்சர்கள் எவ ரும் பங்கேற்காத நிலையில் 19 உறுப்பினர்களுடன் இந்த விவா தம் இடம்பெற்றது. (ஐ-7)

## மாகாண சபை உறுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிராக நேற்று வவுனியா வடக்கு பிரதேச செயலக உத்தியோ கத்தர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த வியாழக்கிழமை வவு னியா வடக்குப் பிரதேச செய லகத்தில் நடைபெற்ற ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது பிரதேச செயலாளருடன் ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து வடக்கு மாகாண சபை உறுப் பினர் அங்கிருந்து வெளியேறி யிருந்தார்.

வீடமைப்புத் திட்டமொன்றுக் கான அடிக்கல் நாட்டும் விழா வைத் தேசிய வீடமைப்பு அதி காரசபைஏற்பாடுசெய்திருந்தது. அந்த நிகழ்வில் பிரதேச செய லாளரும் கலந்துகொண்டிருந் தார். அந்தநிகழ்வுக்குத்தன்னை அழைக்கவில்லை என்றே மாகாண சபை உறுப்பினர் பிர தேச செயலாளருடன் முரண்பட் டார் எனவும், இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே வவுனியா வடக்கு பிரதேச செயலக உத்தியோகத் தர்களால் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது எனவும் கூறப் பட்டது.

வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்துக்கு முன்பாக இடம் பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், 'லிங்கநாதனே இது ஒன்றும் உங்கள்மாளிகை அல்ல', 'சபை பேச்சறிந்து பேசுங்கள்', 'அரச அதிகாரிகள் அச்சுறுத்தல் இன்றிப் பணியாற்ற இடமளி யுங்கள்', 'உங்கள் அரசியல் இங்கு வேண்டாம்' போன்ற வாச கங்கள் எழுதிய பதாதைகளை தாங்கியவாறு அவர்கள் போராட் டத்தில் ஈடுபட்டனர். (ஐ-100)

## ரெலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பப்படுவதற்கும், கருத்து மோதல்களுக்குமே வழிவகுக் கும் எனத் தெரிவித்து அவர்கள் சபையில் இருந்து வெளியேறி னர்.

வடக்கு மாகாணசபையின் 127ஆவது அமர்வு விசேட அமர் வாக நேற்று கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தலைமையில் ஆரம்பமாகியது.

வடக்கு மாகாணப் போக்கு வரத்து அமைச்சர் தொடர்பில் அண்மையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை யடுத்து அமைச்சரவை விடயத் தில் எழுந்துள்ள அசாதாரண சூழ்நிலை தொடர்பில் ஆராயும் பொருட்டு 19 உறுப்பினர்கள் எழுத்துமூலம் விடுத்த வேண்டு கோளுக்கமைய நேற்று விசேட அமர்வு நடைபெற்றது.

அமர்வில் ப.டெனிஸ்வரன் கலந்துகொண்டபோதிலும் அவர் அங்கம் வகிக்கும் கட்சி யான ரெலோ அமைப்பின் ஏனையஐந்துஉறுப்பினர்களும் விவாதத்தைப் புறக்கணித்து அமர்விலிருந்து வெளியேறி னர். (ஐ-7)

## எந்தத்...

(மூன்றாம் பக்கத் தொடர்ச்சி)

கரிக்குமாறு கோர வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டேன்.

அதனைவிடுத்து பாதுகாப்பு அமைச்சிடம் கைத்துப்பாக் கியைப் பெற்றுக்கொண்டு வடக் கில் மேன்மைத் தன்மையைக் காட்ட வேண்டிய அவசியம் எனக்குக் கிடையாது.

அவ்வாறான துப்பாக்கி எதனையும்நான் இதுவரையில் பெற்றுக்கொள்ளவும் இல்லை. நான் துப்பாக்கியை பெற்றுக் கொண்டதாகக் கூறுபவர்கள் அதனை மக்கள் முன்னிலை யில்நிரூபித்துக்காட்டவேண்டும். அதனை விடுத்து புனை கதை

களைக் கூறி மக்கள் என்மீது கொண்டிருக்கின்ற பற்றை அழித்து விடலாம் எனக் கரு துவது பகற்கனவாகும். – என் றுள்ளது. (ஐ-7)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீனவர்கள் நேற்றுத் திங்கட் கிழமை அதிகாலை கைது செய் யப்பட்டனர். அவர்களிடமிருந்து 37கிலோகிராம்கஞ்சாபோதைப் பொருள் மீட்கப்பட்டது என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

கடல் சுற்றுக்காவலில் ஈடுபட் டிருந்த கடற்படையினர், நெடுந் தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீன்பிடிப் படகு ஒன்றை இடை மறித்துச் சோதனையிட்டனர். அதற்குள் 37 கிலோ கிராம் எடையுடைய கஞ்சா போதைப் பொருள் மீட்கப்பட்டது.

இதனையடுத்து அதில் பயணித்த 4 இந்திய மீனவர் களும் கைது செய்யப்பட்டனர். விசாரணைகளுக்காக மீனவர் கள் நால்வரும் காங்கேசன் துறைக்கு அழைத்துச் செல்லப் பட்டனர்.

விசாரணைகளின் பின்னர் இந்தவழக்குகாங்கேசன்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் படும். மீனவர்களும் பொலி ஸாரிடம் ஒப்படைக்கப்படுவர் என்று கடற்படையினர் மேலும் கூறினர். (ஐ-7)

## அலுக்கோசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலாவத்தை, ஆராச்சிக்கட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த 71வயது டைய எஸ்.பி.கருணாவதி என்ற மூதாட்டியே அலுக்கோசுப் பதவிக்கு விண்ணப்பிக்கத்தயா ராக இருக்கிறார் எனக் கூறியுள் ளார்.

அவர் தெரிவிக்கையில் –

நாட்டில் போதைவஸ்தை இல் லாதொழிக்கவேண்டும். அத்து டன் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங் களில் ஈடுபடுவோருக்குத் தூக் குத் தண்டனை வழங்கப்பட வேண்டும்.

நாட்டில் தூக்குத் தண்டனை வழங்குவதற்குரிய அலுக்கோசு பதவி வெற்றிடமாகவே காணப் படுகின்றது. இதற்கு விண்ணப் பம் கோரப்பட்டிருந்த நிலையில் எவரும்விண்ணப்பிக்கவில்லை. இதனால் குற்றச்செயல்கள் அதி கரித்துக்கொண்டுசெல்கின்றன.

பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர்துஷ்பிரயோகம், போதைப் பொருள் பாவனை போன்ற வற்றை முற்றாகத் தடுக்க வேண்டுமென்றால் அரசு தூக் குத்தண்டனையைநிறைவேற்ற வேண்டுமென நான் கேட்டுக் கொள்கின்றேன்.

எவரும் இந்த பதவிக்கு வரா மையால்தான் இவ்வாறான குற்றச் செயல்கள் அதிகரிக்கின் றன. எனவே நான் அப்பதவிக்கு வந்து குற்றச்செயல்களைத் தடுத்து நிறுத்தவுள்ளேன் – என் றார். (ஐ)

## அனந்தியிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் 127ஆவது அமர்வு அவைத்தலைவர்தலைமையில் நேற்று இடம்பெற்றது.

அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் –

தனக்குப்பாதுகாப்புஅச்சுறுத் தல் இருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சுக்குத் தெரியப்படுத்தி கைத்துப்பாக்கி அனுமதியை அமைச்சர் அனந்தி சசிதரன் பெற்றுள்ளார். பொதுவெளியில் தமிழ்த் தேசியம் பேசித்திரியும் இந்தப் பெண் அமைச்சர் தனது மக்களிடத்திலிருந்து பாதுகாப் புக் கேட்டு இலங்கை அரசின் பாதுகாப்பு அமைச்சைநாடியுள் ளமை வேடிக்கையாக இருக்கின் றது. – என்றார்.

இதேவேளை நேற்றைய அமர்வில் மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப் பிடத்தக்கது. (ஐ-7)

## கேப்பாபிலவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், பொதுமக்களின் காணிகளை விடுவிக்கும் சாத்தி யமில்லையென இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

இந்த முகாம் அமைந்துள்ள காணியில் குறிப்பிடத்தக்களவு நிலப்பரப்பு பொதுமக்களுக்குச் சொந்தமாகக் காணப்படு கின்றபோதிலும், அந்தக் காணி உரிமையாளர்களுக்காக மாதி ரிக் கிராமத்தில் காணியுடன் கூடிய வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இந் நிலையில் முகாம் அமைந் துள்ள காணியை விடுவிப்பதற் கான சாத்தியமில்லையெனக் கூறும் இராணுவம், அந்தக் காணிகளின் உரிமையாளர் களில் சிலர், அவற்றை இராணு வத்துக்கு வழங்க இணக்கம் தெரிவித்துள்ளனர் எனவும் கூறியது.

இதேவேளை, பலகோடி ரூபா செலவில், இராணுவ முகாம் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட் டுள்ள நிலையில், அவற்றை உடைத்துத் தள்ளிவிட்டு, வேறு இடங்களுக்கு இடம்பெயரும் போது, மேலும் பலகோடி ரூபா வைச் செலவிட நேர்வதால், இராணுவத்துக்குப்பாரியநட்டம் ஏற்படுவதாக இராணுவப் பேச் சாளர் பிரிகேடியர் சுமித் அத்த பத்து தெரிவித்தார்.

எவ்வாறாயினும், தமது காணி களை விடுவிக்குமாறு கோரி, இராணுவமுகாமுக்குமுன்னால் கேப்பாபிலவு மக்களால் முன் னெடுத்து வரும் கவனயீர்ப்புப் போராட்டம், 503ஆவது நாளைக் கடந்து நடக்கிறது.

தமது பூர்வீகக் காணிகளை முழுமையாகவிடுவிக்கும்வரை, தமது போராட்டம் தொடருமென் றும் தமது காணிகளுக்குள் ஒரு தலைப்பட்சமாக நுழைய வேண் டியநிலை ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் ஏற்படும் விபரீதங் களுக்கு, அரசும் அரசியல்தலை மைகளும், சர்வதேசமுமே பொறுப்புக்கூறவேண்டுமென் றும் அவர்கள் தெரிவித்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## முல்லைத்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லைத்தீவுப்பொலிஸார்தெரிவித் தனர்.

மீளக் குடியமரச் சென்ற ஒரு வர் தமது காணியைச் சுத்திகரித் துக் கொண்டிருக்கும்போதே புதைக்கப்பட்ட நிலையில் இந்த ஆயுதங்களைக் கண்டுபிடித் தார். அவரால் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. பொலி ஸார் அந்த ஆயுதங்களை மீட் டுள்ளனர்.

இவற்றில் ஆர்.பி.ஜி.குண்டு கள், இரண்டு கைக்குண்டுகள் மற்றும் விடுதலைப் புலிகளி னால் தயாரிக்கப்பட்ட மூன்று குண்டுகள்உள்ளனஎனப்பொலி ஸார் மேலும் கூறினர். (ஐ)

## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ் வரனுக்கு உள்ளது என இராணு வத் தளபதி லெப்டினன்ட் ஜென ரல் மகேஷ் சேனநாயக்க தெரி வித்துள்ளார்.

வடக்கில் உள்ள அரச அதி காரிகள் எவரும் தன்னிடம் கேட் காமல் இராணுவத்தினருக்கு எந்தத் தகவல்களையும் வழங் கக்கூடாது என முதலமைச்சர் விக்னேஸ்வரன்கூறியிருந்தார்.

இது குறித்து கருத்து வெளி யிட்டுள்ள இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்க, முதல மைச்சரின் இந்தக் கருத்து கவனத்தில் கொள்ள வேண்டிய அளவில் முக்கியத்துவமிக்க கருத்து அல்ல.

அதேபோல் வடக்கில் இராணு வத்தினர் மேற்கொண்டு வரும் பணிகளுக்கு முதலமைச்சரின் கருத்து எவ்விதமான தடை களையும் ஏற்படுத்தாது. அத் துடன் இராணுவத்தினரும் தமது பணிகளைநிறுத்தபோவதில்லை – என்றார். (ஐ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற விசேட அமர்வின் இறுதியில் உரையாற் றும்போதே அவர் இவ்வாறு கூறி னார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் –

மாகாண சபை சார்ந்து அமைச்சரவை செயற்பாட்டில் இருக்கின்றதா என்ற கேள்வி எழுகின்றது. அவ்வாறு அமைச் சரவை கூட்டவேண்டியபட்சத்தில் அதனைக் கூட்டவேண்டிய பொறுப்பு பிர தம செயலாளருக்கு உண்டு. இவ்வாறான நிலையில் அவ் வாறு கூட்டுகின்ற நிலைமை பிர தம செயலாளருக்குத் தற்போது இல்லைஎன்றேகருதுகின்றேன்.

ஏனெனில் இந்தப் பிரச்சினை தொடர்பாக நீதிமன்றத் தீர்ப்பு தொடர்பில் முதலமைச்சர் அனுப் பிய கடிதத்தின் அடிப்படையில் பார்க்கும்போது அத்தகைய முழுமையான அமைச்சரவை இல்லை என்றே தெரிகின்றது.

1977ஆம் ஆண்டு மாகாண சபைகள் திருத்தச் சட்டத்தின் 27ஆம் இலக்கப் பிரிவு 5 அமுலாக்கம் செய்யப்படுமோ என்ற அச்சம் இருக்கின்றது. அதாவது மாகாண சபை அர சமைப்பில் இருந்து பிறழ்வாகச் செயற்பட்டால் அதனைக் கலைக்க அதிகாரம் உள்ளது.

இது எங்கேயோ ஓர் கை தெரிந்தோ தெரியாமலோ இந் தச்சபையை இக்கட்டான நிலைக் குத் தள்ளி அதனூடாகச் சபை யைக் கலைக்கும் நிலைக்குக் கொண்டுவர முயற்சிக்கின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது – என்றார். (ஐ-7)

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்கியிருக்கும் மஹிந்த, அங்கு வசித்து வரும் இலங்கையர் களைச் சந்திக்க உள்ளார் எனக் கூட்டு எதிரணியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதியுடன் அவரது குடும்ப உறுப்பினர்கள் மற்றும்கூட்டுஎதிரணியின்நாடா ளுமன்ற உறுப்பினர்கள் சில ரும் சிங்கப்பூர் சென்றுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி எதிர் வரும் 19ஆம் திகதி நாடு திரும்ப வுள்ளார். (ஐ)

## கௌரவப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை என வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந் தன் தெரிவித்தார்.

முதலமைச்சர் மக்களை முட்டாளாக்கும் பதில்களையும் மக்கள் பிரதிநிதிகளை அவமானப் படுத்தும் பதில்களையும் தெரி வித்து வருகிறார் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய விசேட அமர்வில் பங் கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் –

இந்தச் சபையிலே எங்கள் அமைச்சர்கள் யார் என்பதை நாம் கூற வேண்டும். தற்போது ஏற்பட்டுள்ள அமைச்சரவைப் பிரச்சினை தொடர்பாக வடக்கு மாகாணமுதலமைச்சர்சபையை யும் மக்கள் பிரதிநிதிகளையும் அவமானப்படுத்தும் பதில் களைத் தெரிவித்து வருவதன் ஊடாகமக்களைமுட்டாளாக்கும் செயற்பாட்டை முன்னெடுத்துள் ளார்.

தற்போது முதலமைச்சரும், அமைச்சர் டெனிஸ்வரனும் அமைச்சர்களாக உள்ளனர் என நீதிமன்றத் தீர்ப்பில் உள்ள நிலையில் தற்போது வடக்கு மாகாணசபையின்அமைச்சர்கள் யார் என்பதைக் கேட்டு வடக்கு மாகாண ஆளுநர், முதலமைச் சருக்கு 05.07.2018 அன்று கடிதம் அனுப்பியிருந்தார்.

அந்தக் கடிதத்துக்கு முதல மைச்சர் 06.07.2018 அன்று 'உங்கள் கடிதத்தை எனது சட் டத்தரணிக்கு அனுப்பியுள் ளேன். அவர்கள் உங்களுக்குப் பதிலளிப்பார்கள்' எனப் பதில் கடிதம்அனுப்பிவிட்டுதனக்குஅவ் வாறான கடிதம் எதுவும் கிடைக்க வில்லை என 10.07.2018 அன்று மாகாண சபையில் தெரி வித்துள்ளார்.

இவ்வாறு முதலமைச்சர் கூறியிருப்பது மூலம் அவர் தெரிந்தே இந்தச் சபையை பிழையாக வழிநடத்தியுள்ளார். அதேபோன்று 07.07.2018 நினைவூட்டல் கடிதத்தை வடக்கு மாகாண ஆளுனர் மீளவும் அனுப்பியுள்ளார். அதற்கு 11.07.2018 அன்று முதலமைச் சர் 'வடக்கு மாகாண சபையில் தற்போது அமைச்சரவையில் எதுவிதமான வெற்றிடமும் இல்லை' எனப் பதில் அனுப்பி யுள்ளார்.

இங்கே எழுந்துள்ள பிரச் சினை என்னவெனில் வெறு மனே கௌரவ பிரச்சினையே தவிர வேறெதுவும் இல்லை. இங்கு சட்ட ஏற்பாடுகளை முறை யாக அமுல்படுத்தினால் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியும்.

வேண்டுமென்றே அரச மைப்பை மீறுவதும் மனித உரிமை மீறலான செயற்பாடாகும். அது ஆளுநர் மீறினாலும் சரி முத லமைச்சர் மீறினாலும் சரி மனித உரிமை மீறலாகவே அமையும் – என்றார். (ஐ-7)

காலைக்கதிர்
Kalaikkathir



# பிரான்ஸ் அணிக்கு பரிசு எவ்வளவு ?



உலகக் கிண்ணக் கால்பந்து தொடரின் இறுதிப் போட்டியில் குரோசியாவை வீழ்த்தி உலகக்கிண்ணத்தை சுவீகரித்த பிரான்ஸ் அணிக்கு 3 கோடியே 80 லட்சம் (38 மில் லியன்) அமெரிக்க டொலர்கள் பரிசுத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

உலகக்கிண்ணத் கால்பந்து திருவிழா ரஷ்யாவில் நேற்றுமுன்தினம் நிறைவடைந்தது. இந்நிலையில் இறுதிப் போட்டியில் பிரான்ஸ் – குரோஷியா அணிகள் மோதின.

இதில் பிரான்ஸ் அணி 4 – 2 என்ற கோல் கணக்கில் குரோசியா அணியை வீழ்த்தி உலகக் கிண்ணத்தை கடந்த 20 வருடங்களின் பின்னர் 2 ஆவது தடவையாக கைப்பற்றியது.

உலகக்கிண்ணத்தை சுவீகரித்த பிரான்ஸ் அணிக்கு பரிசுத்தொகையாக 38 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைத்துள்ளது. இரண்டாவது இடம் பிடித்துள்ள குரோசியா அணிக்கு 28 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பரிசாக கிடைத்துள்ளது.

இதேவேளை, பிரான்ஸ் அணி இம்முறை பங்கேற்ற லீக் போட்டிகளில் எந்த அணியிடமும் தோல்வி அடைந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, 17 ஆவது இடத்திலிருந்து 32 ஆவது இடங்களை பிடித்துள்ள அணிகளுக்கு 8 மில்லியன் அமெரிக்க டொலர்களும் 9 ஆவது இடத்திலிருந்து 16 ஆவது இடங்களைப் பிடித்த அணிகளுக்கு 12 மில்லியன் அமெரிக்க டொலர்களும் 5 ஆவது இடத்திலிருந்து 8 ஆவது இடங்களை பிடித்த அணிகளுக்கு 16 மில்லியன் அமெரிக்க டொலர்களும் நான்காவது இடத்தை பிடித்த அணிக்கு 22 மில்லியன் அமெரிக்க டொலர்களும் 3 ஆவது இடத்தைப் பிடித்த அணிக்கு 24 மில்லியன் அமெரிக்க டொலர்களும் பரிசாக வழங்கப்பட்டுள்ளன.

இம் முறை உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிக்கு கடந்த 2014 ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகக்கிண்ண போட்டிக்கு ஒதுக்கப்பட்ட தொகையை விட 40 வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த 2017 ஆம் ஆண்டு 791 மில்லியன் அமெரிக்க டொலர்களை பிபா வழங்குவதாக அறிவித்திருந்தது.

இந்த மொத்த தொகையில் பரிசுத் தொகையாக 400 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த உலகக்கிண்ண போட்டியுடன் ஒப்பிடும் போது 12 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

உலகக்கிண்ண கால்பந்து வரலாற்றில் அதிக பணப்பரிசை வென்ற அணியாக பிரான்ஸ் அணி உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நேர்மையான அணி ஸ்பெயின்

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் மிகவும் நேர்மையாக விளையாடும் அணிக்கு இறுதியில் பெயார் பிளே (Fair Play) விருது வழங்கப்படும்.

இரண்டாம் சுற்றுக்கு தகுதிப் பெற்ற அணிகளில் அதாவது மஞ்சள் மற்றும் சிவப்பு அட்டைகள் காண்பிக்கப்படாத அல்லது குறைவாக காண்பிக்கப்பட்ட அணிக்கு வழங்கப்படும் இந்த பெயார் பிளே விருது கொடுக்கப்படும்.

இந்த உலகக்கிண்ண தொடரில் ஸ்பெயின் அணி அந்த விருதை வென்றுள்ளது. இந்த உலகக்கோப்பையில் 'நொக் அவுட்' சுற்றோடு வெளியேறியது.

மிகவும் மரியாதையான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் ஸ்பெயின் அணிக்கு பெயார் பிளே விருது கொடுக்கப்பட்டுள்ளது.

1970 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இவ்விருதை பிறேசில் அணி அதிக பட்சமாக நான்கு முறை வென்றுள்ளது.

எனினும் கடந்த 2014 ஆம் ஆண்டு பிறேசிலில் இடம் பெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் கொலம்பியா அணி முதன்முறையாக இவ்விருதை வென்றது.

# 2022 உலகக் கிண்ண உதைபந்தாட்டம் கட்டாரில் நடக்கும்

2022 ஆம் ஆண்டு உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளை நடத்துவதற்கான பொறுப்புகளை ரஷ்ய ஜனாதிபதி புடின், கட்டார் ஜனாதிபதியிடம் ஒப்படைத்தார்.

உலகம் முழுவதும் பல்வேறு ரசிகர்களாலும் கொண்டாடப்படும் விளையாட்டு போட்டிகளில் ஒன்று உதைபந்தாட்டம். 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி நடத்தப்படுகிறது. இந்த ஆண்டு ரஷ்யாவில் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி நடத்தப்பட்டது.

நேற்றுமுன்தினம் நடந்த இறுதிப் போட்டியுடன் ரஷ்யாவில் உதைபந்தாட்டப் போட்டிகள் நிறைவடையும் நிலையில், எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு கட்டார் நாட்டில் உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற விழாவில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின்



உலகக்கிண்ண உதைபந்தை பிபா தலைவர் கியானி இன்பான்ட்டினோவிடம் ஒப்படைக்க அதனை கட்டார் மன்னர் தமீம் பின் ஹமாத் அல் – தானியிடம் ஒப்படைத்தார்.

இது தொடர்பாக ரஷ்ய ஜனாதிபதி புடின், உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளை நடத்தியதும், அடுத்த உலகக்கிண்ணத்துக்கான பொறுப்புகளை கட்டாரிடம் ஒப்படைத்த அனுபவம் சாதனைக்குரிய நிகழ்வு எனத் தெரிவித்துள்ளார்.



# தங்கப் பந்து லூகாவுக்கு

இந்தாண்டு உலகக் கிண்ணப் போட்டி தொடரில் சிறப்பாக விளையாடிய வீரருக்குக் கொடுக்கப்படும் மிகவும் உயரிய விருதான தங்கப் பந்து விருது குரோஷியாவின் லூகா மோட்ரிக்குக்கு வழங்கப்பட்டது.

குரோஷியாவின் வெற்றிக்கு ஆரம்பத்தில் இருந்து சிறப்பாக பங்காற்றினார் லூகா மோட்ரிக். நடுக்களப் பகுதியில் அவர் முதுகெலும்பாக திகழ்ந்தார்.

அவரைத் தாண்டி பந்தை கடத்திச் செல்வது கடினம். அதேபோல் அவர் கையில் பந்து கிடைத்தால் புயல் வேகத்தில் பந்தை எதிரணி கோல் எல்லைக்குள் கொண்டு சென்று விடுவார்.

லூகா மோட்ரிக் பந்தைக் கடத்துவதற்காக 63 கிலோ மீற்றர் தூரம் ஓடியுள்ளார். ஒரு போட்டிக்குச் சராசரியாக 10.5 கிலோ மீற்றர் ஓடியுள்ளார். இதுதான் இதுவரை அதிகபட்ச தூரமாக உள்ளது.

இந்த உலகக் கிண்ணத்தின் மிக உயரிய விருதான தங்கப் பந்து விருதைத் தட்டிசென்றதன் மூலம் அவர் புதிய நாயகனாக உருவெடுத்துள்ளார்.

பிறேசிலில் 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரில் இவ்விருது ஆர்ஜென்ரீனாவின் லயனல் மெஸ்ஸிக்கு வழங்கப்பட்டது.

தங்கப் பந்து விருதை வென்றதன் மூலம் உதைபந்தாட்ட உலகில் மெஸ்ஸி, ரொனால்டோ வரிசையில் லூகா ஒரு புதிய கதாநாயகனாக உருவெடுத்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir



# கைத்தொழில் வர்த்தக அமைச்சின் திட்டங்கள் தொடர்பாக ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூலை 17

கைத்தொழில் வர்த்தக அமைச்சு யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் ஆரம்ப நிகழ்வு விழா தொடர்பான கூட்டம் ஒன்று யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மாவட்ட செயலர் நா.வேதநாயகம், அமைச்சரின் பொதுசன தொடர்பு அதிகாரி மொஹைதீன், கைத்தொழில் அபிவிருத்திச் சபை அதிகாரிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

சுய தொழில் முயற்சியாளர்களுக்கான உதவித் திட்டங்கள், கடனுதவி வழங்கல், தையல் பயிற்சியாளர்களுக்கான தையல் இயந்திரங்கள் வழங்கல் ஆகிய திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த ஆரம்ப நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க , அமைச்சர்களான மங்கள சமரவீர, ரிஷாத் பதியுதீன், வடக்கு முதலமைச்சர் சி. வீ. விக்னேஸ்வரன் மற்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.



# மக்களின் கடும் எதிர்ப்பை சம்பாதிக்கிறது நல்லாட்சி

## கிழக்கின் முன்னாள் முதல்வர் விசனம்

மட்டக்களப்பு, ஜூலை 17

மாகாண சபைத் தேர்தலைத் தொடர்ந்தும் இழுத்தடிப்புச் செய்வதன் மூலம் நல்லாட்சி அரசு தொடர்ச்சியாக மக்களின் எதிர்ப்பைச் சம்பாதித்து வருகிறது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –


மாகாணசபைகளின் தேர்தல்களை நடத்துவது குறித்து அந்தந்த மாகாண சபைகளே தீர்மானிக்க அதிகாரம் வழங்கப்படவேண்டும் என்பதை நான் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளேன். மாகாண சபைகள் மத்திய அரசால் பந்தாடப்படும் நிலைமை காணப்படுகின்றது.



மக்களின் வாக்குகளினால் தெரிவான ஒரு அரசை அந்த மக்களின் விருப்பின்றித்தன்னிச்சையாகவும் எதேச்சதிகாரமாகவும் கையாளும் உரிமையை மத்திய அரசுக்கு மக்கள் வழங்கவில்லை.

ஆகவே மாகாண சபைகளின் கால எல்லைக்குள்ளோ அதன் நிறைவிலோ தேர்தலை நடத்தும் அதிகாரம் அந்தந்த மாகாண சபைகளுக்கே வழங்கப்பட வேண்டும். எனவே தற்போது பிற்போடப்பட்டுள்ள தேர்தல்களைப் பழைய முறையில் உடனடியாக நடத்துவதற்கு அரசு முன்வர வேண்டும். – என்றார். (ஐ)

# உலகக் கிண்ணப் போட்டியை காதலியுடன் ரசித்தார் ரோஹித



மொஸ்கோ, ஜூலை 17

உலக கிண்ண காற்பந்த போட்டித் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் மொஸ்கோவில் நடைபெற்றது. முன்னாள் ஜனாதிபதியின் கடைசி மகன் றோஹித ராஜபக்ஷ தனதுகாதலிட்டியானாவுடன் சென்று போட்டியை நேரில் பார்வையிட்டுள்ளார்.

உலகம் முழுவதும் உள்ள உதைபந்தாட்ட ரசிகர்கள் போட்டியை ஆவலாக பார்த்து ரசித்தனர். இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு முன்னாள்ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கொழும்பில் சங்கரிலா ஹோட்டலில் இருந்து உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை பார்த்து ரசித்துள்ளார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதியின் கடைசி மகன் றோஹித ராஜபக்ஷ தனது காதலி டட்டியானாவுடன் ரஷ்யா, மொஸ்கோவில் லுஸ்னிக்கி மைதானத்தில் இருந்து இறுதிப் போட்டியை பார்த்துள்ளார்.

அவர் அந்தப் புகைப்படத்தை இன்ஸ்ட்ராகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (ஐ)

# பன்னங்கண்டி கிராமத்தின் தேவைகள் விரைவில் பூர்த்தி

## சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு



கிளிநொச்சி, ஜூலை 17

பன்னங்கண்டி கிராமத்தின் அடிப்படைத் தேவைகள் விரைவில் பூர்த்தி செய்யப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

பன்னங்கண்டி சுடர் முன்பள்ளி வளாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த நிதியுதவி வழங்கும் நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

லண்டன் ஸ்ரீ கனக துர்க்கையம்மன் ஆலய நிர்வாகத்தினரால் பன்னங்கண்டி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் புவனேந்திரனின் வேண்டுகோளுக்கு அமைவாக பன்னங்கண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை வேலி அமைப்பதற்கு 175 ஆயிரம் ரூபாவும், முன்பள்ளியில் குழாய்க்கிணறு அமைப்பதற்கு ஒரு லட்சம் ரூபாவும் காசோலையாக வழங்கப்பட்டன.

சுடர் முன்பள்ளி ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாகாணசபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, கிராம மட்டப் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கட்சிச் செயற்பாட்டாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# 29 தங்க பிஸ்கட்டுகளுடன் இரண்டு வர்த்தகர்கள் கைது



கொழும்பு, ஜூலை 17

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக, சட்டவிரோதமான முறையில் தங்க பிஸ்கட்டுகளை நாட்டுக்குள் கொண்டுவர முயன்ற இரு வர்த்தகர்களை கைது செய்துள்ளனர் என விமான நிலையச் சுங்கப்பிரிவினர் தெரிவித்தனர்.

கைதான இரு வர்த்தகர்களும் மன்னார் மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 7.30 மணியளவில் டுபாயிலிருந்து கட்டுநாயக்கா விமானநிலையத்தை வந்தடைந்த ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான விமானத்திலேயே இருவரும் வந்தனர் எனத் தெரியவந்துள்ளது.

இருவரும் விமான நிலையத்தில் இருந்து வெளியேறும் பகுதியூடாக மறைத்து வைத்து தங்க பிஸ்கட்டுகளைக் கடத்த முயன்ற சமயத்தில் கைதாகினர்.

இரண்டு கிலோ 900 கிராம் எடை கொண்ட 29 தங்க பிஸ்கட்டுகள் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஐ)

## லசந்த படுகொலை வழக்கு:

# இரு பொலிஸ் அதிகாரிகளுக்கு பிணை வழங்கியது நீதிமன்றம்

கொழும்பு, ஜூலை 17

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கு நேற்று கல்கிஸை நீதிவான் நீதிமன்ற நீதிபதி மொஹமட் மிஹேல் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரசன்ன நாணயக்கார மற்றும் முன்னாள் உப பொலிஸ் பரிசோதகர்திஸ்ஸ சுகதபால ஆகிய இருவரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, இருவரும் தலா 10 லட்சம் ரூபா சரீரப் பிணை மற்றும் தலா 50 ஆயிரம் ரொக்கப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், இரு வரது கடவுச்சீட்டுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சண்டே லீடர் பத்திரிகையின் சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கடந்த 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை பலவீனப்படுத்த நாம் தயாரில்லை

## விவாதத்தில் பங்கேற்காமை குறித்து ரெலோ விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

மக்கள் எம் மீது வைத்துள்ள நம்பிக்கையைப் பலவீனப்படுத்தும் விதத்தில் செயற்படக் கூடாது என்பதால் டெனிஸ்வரன் தொடர்பான விவாதத்தில் கலந்து கொள்வதைத் தவிர்த்துக் கொள்கிறோம் என ரெலோவின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் என்.விந்தன் கனகரட்ணம் தெரிவித்தார்.

நேற்றைய விசேட அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

டெனிஸ்வரன் தொடர்பான விவாதத்தில் கலந்து கொள்வதைத் தவிர்ப்பது தொடர்பாகக் கவனமான பரிசீலனையின் பின்னரே நாம் ஒரு முடிவுக்கு வந்துள்ளோம். அந்த அடிப்படையில் இந்த விவாதத்திலிருந்து ரெலோ கட்சியைச் சார்ந்த நாம் ஒதுங்கி நிற்கின்றோம் என்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய சூழ்நிலையில் இந்த விவாதத்தால் நிலைமையில் எந்த மாற்றமும் ஏற்படும் என்று நாம் கருதவில்லை.

ஆரம்பத்தில் இந்த விவாதத்தைக் கோரிய உறுப்பினர்களில் எமது கட்சி சார்ந்த ஒருசிலர் இருந்தாலும் நாம் எதிர்பார்ப்பதற்கு மாறாக விவாதத்தின் நோக்கம் திசை திருப்பப்படுவதற்கும், கருத்து மோதல்கள் இந்தச் சபையில் மேலும் கூர்மை அடைவதற்கும் இந்த விவாதம் வழிவகுக்கும் என்றே நாம் இப்போது கருதுகின்றோம்.

அதனால் இந்த விவாதத்திலிருந்து ரெலோ கட்சியைச் சார்ந்த நாம் ஒதுங்கி நிற்கின்றோம். – என்றார். (ஐ–7)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.07.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.